15வது வருடத்தில்

# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059 — 416-282-4978

நதி 15 | பாலம் 07 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 01, 2005

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு

WALK IN DENTAL CLINIC

Dr. Iru Vijayanathan

குடும்ப பல்வைத்தியர்



OPEN 7 DAYS

416-264-3232

3150 Eglinton Ave. E.

Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)



HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

Direct: 416.315.9397

OFFICE: 416.321.6969

Sales Agents Welcome



03 கூனல் ஏன் ஏற்படுகிறது?



06 மனம் கவர்ந்த மலர்



ஏப்பிரல் 01, 2005 முட்டாள்கள் தினம்

# சுமத்திராவில் பூகம்பம் விஞ்ஞானிகள் அச்சம்



சுமத்திராவில் மீண்டும் ஒரு பாரிய பூகம்பம் ஏற்படும் என்று விஞ்ஞானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்

கடந்த திங்கள் கிழமை இரவு இந்தோனேசியாவின் சுமத்திரா தீவுக்கு அப்பால் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியால் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர் இழந்து இருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

தொடர்ச்சி 06ம் பக்கம்

# கனடாவில் ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புச் செயலணி உதயம்

ஆழிப்பேரலை ஏற்படுத்திய அழிவுகளினால் பாதிப்புற்றிருக்கும் இலங்கையின் வடகிழக்கு பகுதிகளில் வாழும் மக்களின் நிரந்தர கட்டுமானப் பணிகளுக்கு உதவும் நோக்கில் கனடியத் தமிழர் மத்தியில் இருந்து ஒரு பொதுச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. செயலணி, 'கனடியத் தமிழர் ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புச் செயலணி (Canadian Tamil's tsunami redevelopment)' என்ற பெயரில் பணியினை ஆரம்பித்துள்ளது.

வடகிழக்கு பகுதிகளின் நிரந்தரக் கட்டுமானத்திற்காக 1.5 பில்லியன் டொலர் தேவை என மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அரச உதவிகள் கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப் போகும் நிலையில் அழிவுற்ற பகுதிகள், மீள் கட்டுமானத்திற்காக அரச சார்பற்ற நிறுவனங்களையும், புலம் பெயர்ந்து வாழும் உறவுகளையுமே பெரிதும் நம்பியிருக்கின்றன.

இந்நிலையில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்பின் முழுமையை வெளிக்கொணர்வதுடன், பாதிக்கப்பட்டோரின் நிரந்தர மீள்கட்டமைப்புக்கு உதவ முன்வரும் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து மிக விரைவாகச் செயற்படுவதோடு. செயலணியின் தொடர் செயற்பாடாக கட்டங்கட்டமாக கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடகிழக்கின் மீள்கட்டுமானத்திற்குத் தேவையான 1.5 பில்லியன் என்ற பாரிய தொகையில் குறைந்தளவு ஒரு வீதத்தினையேனும் இவ்வாண்டு நிறைவுக்குள் மக்களிடையே திரட்டி, கனடியத் தமிழ் மக்கள் சார்பில் கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்படும்.

தொடர்ச்சி 06ம் பக்கம்



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication

Since 1991

$45.00/ Month

- Up to 700 Min Free
- Evenings & Weekends Free
- 2 Year contract

••• Offer Ends without notice •••

Family plan $40.00/ M/2 phones

- 100 Min Daytime to share /Weekend Free
- Upgradable for Free Evening with more Min 2500 Min Free
- between 2 phones V/M, C/W, C/C Free
- Buy one phone as low as $49.99 & 2nd Free

••• 2 year contract

More Info. Call: 416-740-5292

5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு



மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

416.267.8221

"Making Dreams Reality"



HomeLife GTA Realty Inc.

Ravi R. Raveendran BSc.(Eng)

Sales Representative

416•817•8479

Bus: 416•321•6969

1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel & Business



416.321.1515 •905.294.2429

4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...

ரவி பரமு

வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176

OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.

1711 McCowan Rd. Suite #206, Toronto

# பாட்டிக்கு முதுகு ஏன் கூனுகிறது?

## நீண்டகாலம் உயிர் வாழ்வதற்கான இரகசியங்கள் - 7



திடீரென்று ஒரு நாள் பனியில் சறுக்கி அல்லது குளியல் அறையில் இலேசாக சறுக்கி விழுந்து, எலும்பு முறிவு என்று மருத்துவரிடம் போனவர்களை உங்களுக்குத் தெரியுமா?

பெரும்பாலும் இந்நிலைமையில் உள்ளவர்களை ஒஸ்தியோபோரோசிஸ் (Osteoporosis) என்ற நோய் தாக்கி இருந்திருக்கும்.

இரண்டரை மில்லியன் கனேடியர்களைத் தாக்கி உள்ள இந்த நோய், அமெரிக்காவில் இருபத்தி ஐந்து மில்லியன் மக்களைத் தாக்கி உள்ளது. இந்நோய் ஆண்களைவிட எட்டு மடங்கு பெண்களையே தாக்குகின்றது. ஆசியப் பெண்கள் அதிக அளவில் இந்த எலும்பு நோயினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு காரணம் கல்சியம் குறைவான உணவுப் பொருட்களை இவர்கள் உண்பதும், மெல்லிய உடல் அமைப்புமே.

ஐம்பது வயதுடைய பெண்களில் நான்கில் ஒரு பெண் ஒஸ்தியோபோரோசிஸ் நோயால் பாதிக்கப்படுகின்றாள். ஐம்பது வயதுடைய ஆண்களில் எட்டில் ஒரு ஆண் இதே நோயால் பாதிக்கப்படுகின்றான். அதேசமயம் அறுபது வயதில் இரண்டில் ஒரு பெண்ணையும், மூன்றில் ஒரு ஆணையும் இந்நோய் தாக்குகின்றது.

எல்லா எலும்புகளையும் இந்நோய் பாதித்தாலும், குறிப்பாக முதுகுத் தண்டு, மணிக்கட்டெலும்பு, இடுப்பு, கை ஆகிய எலும்புகளை அதிகமாகத் தாக்குகின்றது. இயல்பில் மணிக்கட்டு எலும்பு பலமானது. இலேசாக உடைக்க முடியாது. ஆனால் ஒஸ்தியோபோரஸ் இந்த எலும்புகளையெல்லாம் மிக இலேசாக உடையக் கூடிய நிலைமைக்கு கொண்டு வந்துவிடும்.

ஒஸ்தியோபோரோசிஸ் தாக்கி மணிக்கட்டெலும்பு உடைந்தவர்கள், கடைக்குப் போய் பொருட்கள் வாங்குவது, உடை அணிந்து கொள்வது, நீந்துவது, வீட்டு வேலை செய்வது என்று எதுவும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடுகின்றனர். இதுதான் போகட்டும் என்றால், பத்திரிகையை தூக்கி படிக்க முடியாது போய்விடும். இடுப்பு எலும்பு இந்நோயால் பாதிக்கப்பட்டு உடைந்து போனால், நிரந்தரமாக படுக்கையிலேயே இருக்க வேண்டி ஏற்படும். இதில் இருந்து இந்நோயின் உக்கிரத்தை விளங்கிக் கொள்ளுங்கள்

இதற்கு அடிப்படையான காரணம் 'அதியசய உணவூட்டம்' (The Miracle Nutrient) என்று அழைக்கப்படும் கல்சியமே காரணமாகும்.

நாம் கருப்பையில் இருக்கின்ற போதிருந்தே நமக்கு கல்சியம் அவசியம். எலும்புகள், பற்களின் உருவாக்கத்திற்கு கல்சியம் அத்தியாவசியமாகும். கருப்பையில் உள்ள குழந்தைக்கு போதுமான கல்சியம் கிடைக்காத பட்சத்தில் எலும்பு, மற்றும் பற்களின் வளர்ச்சியில் குறைபாடு ஏற்படும்.

நமது ஒவ்வொரு கலமும் கல்சியத்தை பயன் படுத்துகின்றன. ஒரு சராசரி மனிதரின் உடலில் 1.2 கிலோ கிராம் கல்சியம் உள்ளது. இந்த கல்சியத்தில் 99 வீதம் நமது எலும்புகளிலும் பற்களிலுமே சேமிக்கப்பட்டுள்ளது. மிகுதி ஒரு வீதமான கல்சியம் உடல் தசை இழையங்களிலும், குருதியிலும் உள்ளது. இந்த ஒரு விகிதமான கல்சியம் உடல் கலங்களின் செயல்பாட்டுக்கும், கலங்களின் விருத்திக்கும், தசைகளின் அசைவுக்கும், நரம்பு மண்டலத்தின் ஊடாக செய்திகள் கடத்தப்படுவதற்கும், குருதி உறைதலுக்கும் மிக அத்தியாவசியமாக உள்ளது. இந்த செயற்பாடுகள் எல்லாம் கல்சியம் இல்லை என்றால் உடனடியாக நிறுத்தப்பட்டுவிடும்.

நாள் ஒன்றுக்கு எமக்குத் தேவையான கல்சியம், நாம் உண்ணுகின்ற உணவில் இல்லை என்றால் நமது குருதியில் கல்சியத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. குருதியில் கல்சியத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உடற் கலங்கள், நரம்பு மண்டலங்களின் தொழிற்பாட்டுக்குத் தேவையான கல்சியத்தை குருதியினால் விநியோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் அது அபாயகரமான நிலைமையை ஏற்படுத்திவிடும்.

இப்படியான ஒரு அபாயகரமான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்காக உடலில் ஓர் அதிசயமான ஏற்பாடு உள்ளது. குருதியில் கல்சியத்திற்கு தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒவ்வொரு சமயத்திலும், உடனடியாக எலும்பில் உள்ள கல்சியம் குருதிக்கு கடத்தப்படுகின்றது. இதன் மூலம் உடலின் தொழில்பாடுகள் எவ்வித பாதிப்பும் இன்றி தொடர்ந்து நடைபெறக் கூடியதாக உள்ளது.

நாள் ஒன்றுக்கு உடலுக்குத் தேவையான கல்சியத்தை, உணவு மூலம் பெற்றுக் கொள்ளாமல், எலும்பில் இருந்து எடுக்க எடுக்க எலும்பில் உள்ள கல்சியத்தின் அளவு குறைந்து குறைந்து எலும்பு மிகப் பலவீனமான நிலைமைக்குச் சென்றுவிடும். இச்சமயத்தில் இலேசாக விழுந்தாலே எலும்பு உடைந்துவிடுகின்றது. இந்த நிலைமையே ஒஸ்தியோபோரோசிஸ் (Osteoporosis) ஆகும்.

புள்ளி விபரங்களின்படி குழந்தை பெற்றுக் கொள்ளும் தகுதி உடைய பெண்களில், ஆறு வீதமானவர்கள் மட்டுமே தமது உடலுக்குத் தேவையான கல்சியத்தை உணவின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர். சராசரிப் பெண்ணுக்கு 700mg கல்சியம் தினமும் தேவைப்படுகின்றது. 94 வீதமான பெண்கள் 400mg கல்சியத்தை மட்டுமே தினமும் உள்ளெடுக்கின்றனர். இதன் காரணமாக பற்றாக் குறையான 300mg கல்சியமும் எலும்பில் இருந்தே குருதிக்கு தினமும் கடத்தப்படுகின்றது.

> **ஒஸ்தியோபோரோசிஸ் தாக்கி மணிக்கட்டெலும்பு உடைந்தவர்கள், கடைக்குப் போய் பொருட்கள் வாங்குவது, உடை அணிந்து கொள்வது, நீந்துவது, வீட்டு வேலை செய்வது என்று எதுவும் செய்ய முடியாதவர்களாக ஆகிவிடுகின்றனர். அத்தோடு பத்திரிகையைத் தூக்கி மடிக்க முடியாது போய்விடும்.**

ஒஸ்தியோபோரோசிஸ் ஒரு மௌனமான நோய் (Silent Disease) என்று அழைக்கப்படுகின்றது. ஒருவரை ஒஸ்தியோபோரோசஸ் தாக்கியதற்கான எந்த அடையாளமும், அறிகுறியும் வெளியில் தெரியாது. பல வருடங்களுக்கு இந்த நிலைமை நீடிக்கும். பல மில்லியன் மக்கள் அது தங்களைத் தாக்காது என்று நம்பிக்கொண்டிருக்கின்ற அதே சமயம் அவர்களை அந்த நோய் சிறுகச் சிறுக அழித்துக் கொண்டிருக்கும். இவர்களில் ஒருவராக நீங்கள் கூட இருக்கலாம்.

இளமைக்காலத்தில் நமது உடலில் எலும்புகள் வளர்ச்சியடைகின்றன, உறுதியாக்கப்படுகின்றன. எலும்பில் இருந்து இழக்கப்படும் கல்சியத்தின் அளவைவிட, எலும்பில் சேருகின்ற கல்சியத்தின் அளவே விரைவாகவும், அதிகமாகவும் இருக்கும். ஆனால் எமது நடுத்தர வயதுக்குப் (30-35) பின்னர் எலும்பில் சேமிக்கப்படும் கல்சியத்தின் அளவினை விடவும், அதிக கல்சியம் எலும்பில் இருந்து இழக்கப்படுகின்றது. இதனால்தான் நமது நடுத்தர வயதுக்குப் பின்னர் நம்மை இந்த ஒஸ்தியோபோரோசிஸ் (Osteoporosis) நோய் தாக்கக் கூடியதாக உள்ளது. ஆண்களைவ விட பெண்களை இந்நோய் தாக்குவதற்கு வேறு சில காரணங்கள் உள்ளன. அதில் முக்கியமானது பெண்களின் உடலில் ஏற்படுகின்ற ஓமோன் மாற்றம் ஆகும்.

**செழியன்**

அவ்வைப்பாட்டிக்கு முதுகு ஏன் கூனல் என்று எப்போதாவது யோசித்திருக்கின்றீர்களா?

வயது போகப்போக கூனல் வரும் தானே. நம்ம ஊர் பாட்டிகளின் முதுகும் கூனுவது இதனால் தானே என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் தாத்தாக்களின் முதுகு ஏன் இந்தளவுக்குக் கூனுவது இல்லை?

பெண்களுக்கு மாதவிடாய் முற்றாக நின்றதும் (Menopause), பெண்களின் பாலியல் ஓமோன் ஆன எஸ்ரோஜன் (Estrogen) இன் அளவு திடீரென்று குருதியில் குறைகின்றது. இந்த ஓமோன் குறைவு பெண்களின் எலும்பில் இருந்து கல்சியம் இழக்கப்படும் வீதத்தை மூன்று மடங்காக அதிகரிக்கின்றது.

40-60 வயதுக்கும் இடையில் பெண்களின் முப்பது வீதமான எலும்பு இழக்கப்பட்டு விடுகின்றது. பெண்களின் வயது 75-80 அடையும் போது அவர்களின் 45 சதவீதமான எலும்பு குறைந்து விடுகின்றது. இதே வயதில் ஆண்களுக்கு 15-20 எலும்பு மட்டுமே குறைகின்றது. முதுகுத்தண்டு எலும்புகளில் இருந்து கல்சியம் இழக்கப்பட்டு, முதுகு எலும்பு சுருங்கும் போது, அதன் உயரமும் குறைகின்றது. இதன் காரணமாகவே பாட்டிமாருக்கு முதுகில் கூனல் ஏற்படுகின்றது.

பெண்களின் இளமைக்காலத்தில் ஆண்களைவிட குறைவான எலும்பே உருவாகின்றது. அத்தோடு அவர்கள் பொதுவாக ஆண்களை விட குறைவான கல்சியத்தை உள்ளெடுக்கின்றனர். அத்தோடு ஆண்களைவிட குறைவான உடல் உழைப்பில் ஈடுபடுகின்றனர் (உடல் பயிற்சி அதிக கல்சியத்தை எலும்பில் சேமிக்கும்). இவை காரணமாகவும் பெண்கள் இந்த நோயால் பாதிக்கப்படும் அளவு அதிகமாக உள்ளது.

கர்ப்பம் தரித்த பெண்களிற்கும், தாய்பால் வழங்கும் தாய்மாருக்குமான கல்சியத்தின் தேவை அதிகரிக்கின்றது. தாய்பாலின் நிறைய கல்சியம் உள்ளது. அது குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படுகின்றது. ஆனால் அதேசமயம் தாய் தனது கல்சியத்தை இழக்கின்றாள்.

புகைத்தல், அதிக மது அருந்தல், கல்சியம் குறைவான உணவுகளை உண்ணுவது, கோப்பி குடித்தல் என்பன இந்நோயின் பாதிப்பை அதி- கரிக்கச் செய்யும். புகைபிடித்தல் இந்நோய் வருவதற்கான சந்தர்ப்பத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கச் செய்கின்றது. தினமும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட கிளாஸ் மது அருந்துவதும் இந்நோய் வருவதற்கான சந்தர்ப்பத்தை அதிகரிக்கவே செய்கின்றது. இத்தோடு சில மருந்து வகைகள் (உதாரணம்: cortisone வகைகள்) இந்நோய் வருவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றது. புகைத்தல், மதுபானம், சோடா, Caffein என்பன குடலில் இருந்து குருதித் தொகுதிக்குள் கல்சியம் அகத்துறிஞ்சுவதை தடுக்கின்றன.

இதே சமயம் நமது வியர்வை, சிறுநீர் வழியாகவும் சிறு அளவு கல்சியத்தை நாம்

தொடர்ச்சி 18ம் பக்கம்

விளம்பரம் VLAMBARAM™

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# தமிழ் படங்களுக்கும் தமிழ் வாழ்க்கைக்கும் உறவு கிடையாது

இன்னமும் ஒரு மிக வேதனை தரும் விடயம், இன்று தமிழ் நாட்டில் ஒரு தலைமுறையின் குழந்தைகள் தமிழ் தெரியாமலேயே வளர்கின்றன. அவர்களுக்கு எந்த நிர்ப்பந்தமுமில்லை. தமிழ் மக்களாக தமிழ் கற்காது வளர்வது பற்றி அவர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, அரசுக்கோ எவ்வித குற்ற உணர்வுமில்லை. ஆனால், தமிழ் வளர்ச்சி பற்றிய கோசங்கள் அரசியல் கட்சிகளிடையே உண்டு.

கல்லூரிகளில் எல்லா பாடங்களும், தொழில் கல்வியும் கூட தமிழில் கற்பிக்கவேண்டும் என்று பலத்த கோசங்கள் உண்டு. இதை எல்லோருமே வலியுறுத்துகிறார்கள். ஒரு தமிழ்க் குழந்தை தமிழ் நாட்டில், பள்ளியில் தமிழ் கற்காமலேயே வளர்கிறது. ஆனால் அதற்கு மேல் படிப்புகள் தமிழில் தரப்படவேண்டும் என்று எழும் அரசியல் நிர்ப்பந்தம், வரலாறு காணாத (இது எங்களுக்குப் பிடித்த சொற்றொடர்) பிதற்றல் அல்லாமல் வேறு என்ன? இப்படி வளரும் தலைமுறையை, வளர்ந்து வரும் தொழில் நுட்ப, விஞ்ஞான உலகில், கிராமமாகல் குறுகி வரும் உலகில், ஒரு தனித்தீவாக தமிழ் நாட்டை சீரழித்துவிடும் பயங்கரம் அல்லாமல் வேறென்ன? இதற்கெல்லாம் மேலாக, இதன் பின்னுள்ள வேடதாரித்தனம் மிகக் கொடுமையானது.

அரசியல் தலைவர்கள் பிள்ளைகள் யாரும் தமிழ் மாத்திரமே கற்றவர்கள் இல்லை. இந்தி எதிர்ப்பு இயக்கத் தோற்றத்திற்குப் பின் தலைமுறையின் பேரப்பிள்ளை, இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் மூத்த தலைமையின் பேரப்பிள்ளைக்கு இந்தி தெரியும் என்பது ஒரு கூடுதல் தகுதியாக முன் வைக்கப்பட்டது. அந்த தகுதி எங்கிருந்து அந்த பேரப் பிள்ளை பெற்றது, எப்படி பெற்றது? அநேக அரசு அல்லாத தனியார் பள்ளிகள், தமிழில் தான் பாடங்கள் நடத்தப் படவேண்டும் என்ற அரசியல் நிர்ப்பந்தத்திற்கு அடி பணிய மறுத்து, நீதி மன்றத்தில் வழக்காடிய போது, நீதி மன்றம் தமிழை நிர்ப்பந்திப்பது, சட்டத்திற்கு புறம்பானது என்று, பள்ளிகளின் தமிழ் கற்பிக்க மறுக்கும் சுதந்திரத்தை அனுமதித்தன. இதை விட மோசமான நிலை என்ன இருக்க முடியும்.?

தமிழ் நாட்டில் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும் என்று கட்டாயப் படுத்துவது சட்ட விரோதம். தமிழ் மொழிக்காகப் போராடுபவர்கள் அரசாளத் தொடங்கி 30 வருடங்களுக்குப் பிறகு, அவர்கள் தமிழ் பற்று சாதித்தது என்ன? தமிழ் கற்பிக்க கட்டாயப் படுத்துவது சட்ட விரோதமான செயல் என்று நீதி மன்றங்களே சொல்லும் நிலை.

இத்தகைய ஓர் அபத்தமான பின்னணியில், இதுகாறும் எதிர்முனையில் நின்று தமக்குள் பகைமை பாராட்டிய இரண்டு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து கொண்டு தமிழ் படங்களுக்கு தமிழ் பெயர் தான் சூட்டப்படவேண்டும் என்று போராட்டம் தொடங்கப் போகிறோம் என்பது ஒரு கேலிகூத்தல்லாமல் வேறு என்ன?

தமிழ் படங்களுக்கு தமிழ் பெயர் தந்து விட்டால் என்ன விமோசனம் வந்து விடும்? இது இப்போராட்டத்தைத் தொடங்கியிருக்கும் அரசியல் தலைவர்களுக்கோ, அக்கட்சியினருக்கோ தெரியாததல்ல. அவர்கள் அவ்வளவு அப்பாவிகள் அல்லர். "பாய்ஸ்" என்றொரு சங்கர் படம். ஓர் ஆபாசமான, நமது பொதுப் புத்தியையும், கலை உணர்வையும் குத்திக் குதறும் படம் அது. அதற்கு "பையன்கள்" என்றோ அல்லது "பசங்க" என்றோ பெயர் மாற்றி விட்டால் என்ன மாறிவிடும்? என்ன புரட்சி நடந்து விடும்?

முதலில் தமிழ் படங்களுக்கும் தமிழ் வாழ்க்கைக்கும் ஏதும் உறவு கிடையாது. அதில் நடிக்கும் நடிகைகள் கூட தமிழ் பெண்கள் இல்லை. தமிழ்பட நடிகர்களும், முதலாளிகளும், இயக்குனர்களும் குறி வைப்பது தமிழ் தெரியாத வட நாட்டு இளம் நடிகைகளைத்தான்.



பாட்டு, பேச்சு எல்லாம் 'டப்' செய்யப்படுகின்றன. "சோங்"கும் 'டான்ஸ்'ம் 'சூட்' பண்ண அவர்கள் போவது, கனடா, சிங்கப்பூர், ஸ்விட்ஸர்லாந்து, ஏ. ஆர். ரஹ்மான் இசையோ, ஆப்பிரிக்கா, சைனா, பெர்ஷியன் இப்படியான ஒரு கலவை. 'டான்ஸ் மாஸ்டர்' கதாநாயகனையும் கதாநாயகியையும், ஒரு முப்பது நாற்பது 'எக்ஸ்டிரா'க்களோடு ஒரு வரி 'டான்ஸ்' பண்ண ஆம்ஸ்டர்டாம் தெரு ஒன்றையும், அடுத்த வரி டான்ஸ் பண்ண நயாகரா பின்னணியையும், மூன்றாம் வரிக்கு அலைமோதும் கடலை எதிர்நோக்கியிருக்கும் பாறையின் உச்சி முனை ஒன்றுமாக "லொகேசன் ஸெலெக்ட்" பண்ணி வைச்சிருப்பார். "ஸ்டோரி ரீடிங்க்கு" வந்திருந்த அண்ணாச்சி ஒருவர், "அண்ணே, கொலராடோ க்ராண்ட் கென்யானில் ஒரு டான்ஸ் அய்ட்டம் வச்சி சேத்துக்கிட்டா தூப்பராக இருக்கும்" என்பார். ஆக, அந்த கலைஞர் ஆலோசனையும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கும் சோங்கின் இன்னொரு வரிக்கு 'சூட்' பண்ணலாம் என்று தீர்மானிக்கப்படும். இப்படியான பண்பாடும் கலையும் வழங்கும் தமிழ் சினிமா உலகில் தமிழ் என்று சொல்ல என்ன இருக்கிறது என்பது ஒரு பிரச்சினை. இதில் படத்தின் தலைப்பு தமிழில் இல்லாது போனது தான் குறையா? அந்தக் குறை நீங்கி விட்டால் தமிழ் கலையும் கலாசாரமும் செழித்து ஓங்கிவிடும் என்று மருத்துவர் அய்யா ராமதாஸோ, விடுதலைச் சிறுத்தை இயக்க தலைவர் திருமாவளவனோ நம்புவதாக யார் நம்புவார்கள்.

இது தமிழ் பற்றிய விசயமே இல்லை என்பதற்கு ஓர் உதாரணம், இதற்கு முன்னர், அன்றைய டாக்டர் அய்யா அவர்கள் தமிழ் பெயர் இயக்கம் ஆரம்பிக்காத அந்த காலத்தில், ரஜினி காந்தின் 'பாபா' படம் வெளியான் சமயம், அந்த படத்தின் சுவரொட்டிகள், தமிழ் ரசிகர்களின் மனத்தைக் கெடுக்கும் என்று சொல்லி, 'பாபா' படம் தன் கட்சி பலமாக இருக்கும் எந்த இடத்திலும் வெளி யாகக் கூடாது, தன் கட்சித் தொண்டர்கள் அப் படத்தைப் பார்க்கக்கூடாது என்றும் அறிவித்தார்.

'பாபா' படம் திரையிடப்பட்ட அரங்குகள் சூறையாடப்பட்டன. படச் சுருள்கள் கைப்பற்றப் பட்டு அழிக்கப்பட்டன. ஜனநாயக சமூகத்தில் இப்படிப்பட்ட ஓர் அரசியல் நடவடிக்கையும் தொண்டர்களின் செயலும் அராஜகமானது. ஒரு சட்டம் ஒழுங்கு காக்கும் சமூகம் இதை அனுமதிக்க இயலாது. ஆனாலும் ரஜினி ரசிகர்கள் தவிர மற்ற கட்சிகளுக்கும், அரசுக் கட்சிக்கும் ரஜினியை தவிக்கவிட்டுப் பார்ப்பதில், இதில் தலையிடாது பேசாதிருந்து ரஜினிக்கு பாடம் கற்கட்டும் என்று நினைப்பதற்கான காரணங்கள் உண்டு. ரஜினியும் பாடம் கற்றார்.

'பாபா' படத்தை நிறைய பணம் கொடுத்து வாங்கிய விநியோகஸ்தர்களும், திரையிடுவோரும், இதற்கு ஒரு சமாதானமான தீர்வு ஏற்பட்டாலொழிய தாங்கள் பெரும் நட்டத்திற்கு ஆளாக நேரிடும் என்று ரஜினியிடம் முறையிட்டனர். இதிலும் சரி, பின்னர், பொதுத் தேர்தலின் போது, ரஜினி தன் ரசிகர்களுக்கு விடுத்த ஒரு மாதிரியான விளக்கெண்ணைய் அறிவிப்பிலும் சரி (அந்த அறிவிப்பு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் மிக ராஜதந்திரமான அறிக்கை என்று ரஜினிக்கு நினைப்பு) தமிழ் நாட்டுக்கு வெட்ட வெளிச்சமான உண்மை, பா.மா.க தொண்டர்களின்முன், டாக்டர் அய்யாவின் முன், ரஜினி சொல்லு எடுபடாது என்பது தான்.

இப்போது டாக்டர் அய்யா குறி வைத்திருப்பது, அரசியல் தலைமைக் கனவு காணும் விஜய்காந்த் என்னும் 'புரட்சி நடிகர்' மீது. இன்னும் இவ்விருவரும் மோதிக் கொள்ளவில்லை. இதற்கெல்லாம் பின்னிருக்கும் அரசியல் நோக்கம், தான் அரசோச்சும் குட்டி சாம்ராஜ்யமான வடமாவட்டங்களில், இன்னொரு சக்தியை, அரசியல் தலைமையாகும் கனவு காணும் யாரையும் தன் தொண்டர்களை, தன் செல்வாக்கை பகிர்ந்து கொள்ள முயற்சிக்கும் யாரையும் வளரவிடக்கூடாது. கொஞ்சம் வளர்ந்திருப்பதாக தான் சந்தேகிக்கும் எவரையும் ஒன்றுமில்லாத வெத்து வேட்டுக் களாக்கிக் காட்ட வேண்டும் என்பது தான்.

## வெங்கட் சாமிநாதன்

திருமாவளவனின் வாக்கு வங்கியான தலித் மக்களைத் தன் பக்கம் இழுக்கமுடியாது. தான் கோலோச்சும் வன்னிய வோட்டு வங்கி தன்னை விட்டுப் போய்விடக்கூடாது. பிரிக்கப் படவும் கூடாது. இந்த வாக்கு வங்கி தன்னிடம் உறுதியாக இருப்பதன் காரணமாகத்தான், இது காறும் தன்னை மதிக்காத, தன் கோரிக்கைகளுக்கு படிய மனமில்லாத, தி.மு.க.வும் அதன் தலைவரும், இத் தேர்தலின் போது, தன் வட மாவட்ட செல்வாக்கு தி.மு.க.வுக்கு எதிராக செயல்படாது காத்துக் கொள்ளத்தான், கருணாநிதி இம்முறை தான் கேட்டதையெல்லாம் தாராளமாக கொடுத்து தன்னை கூட்டணியில் முதலில் சேர்த்து தன்னை பலப்படுத்திக் கொண்டு பின் மற்ற கட்சிகளுடன் அந்த பலத்துடன் பேரம் பேச தயாரானார் என்பது டாக்டர் அய்யாவுக்குத் தெரியும். ஆனால் தன் பேரம் பேசும் பலத்தை இன்னும் பெருக்கிக் கொள்ளவும், கருணாநிதியையும் தி.மு.க.வையுமே தான் நம்பியிருக்கிறோம் என்று தி.மு.க தலைமை நினைக்க விட்டு விடக்கூடாது என்ற திட்டமும் டாக்டர் அய்யாவுக்கு உண்டு. அதனால்தான் வன்னியசமூகத்தின் பழம் பகையான திருமாவளவனை தன் கூட்டாளியாக சேர்த்துக் கொண்டதும், இருவரின் கூட்டு நடவடிக்கையாக, தமிழ் மக்களை உசுப்பி எழுப்ப வல்ல உணர்ச்சி பொங்க வைக்கும் ஒரு கொள்கைப் போராட்டம், வெற்றியை நிச்சயம் ஈட்டித் தரும் கொள்கைப் போராட்டம், இது காறும் திராவிடக் கட்சிகள் தம் ஏகபோகமாகக் கருதிவரும் ஒரு போராட்டம், தி.மு.க.வோ அதன் தலைவரோ சந்தேகம் கொண்டு வெளிப்படையாக எதிர்க்க இயலாத போராட்ட ஆயுதம், தமிழ், தமிழ், தமிழ்.

இந்த ஆயுதம் எளிதில் தீப் பற்றிக் கொள்ளும் சக்தி கொண்டதாகவும் இருக்கவேண்டும். அதிகம் தனக்கு உழைப்போ நட்டமோ தராததாகவும் இருக்க வேண்டும், இப்படியெல்லாம் யோசனை போயிருக்கிறது.

இதன் மூலம் தன் வட மாவட்டங்களில், திருமாவளவனின் வாக்கு வங்கியையும் தன் தோழமை சக்தியாகச் சேர்த்துக் கொண்டு, திமுக வின் மடியிலும் கைவைக்கும் ஒன்றாகச் செய்து கொண்டால், அடுத்த தேர்தலுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

'சண்டியர்' பெயரை நீக்கு என்று பயமுறுத்தியதும், கமல்ஹாஸன், விருமாண்டி என்று பெயர் மாற்றியது, பயமுறுத்தியவர்களுக்கு வெற்றியும் ஆயிற்று. யாருக்கும் ஏதும் நட்டமும் இல்லை. ஒரு பயமுறுத்தல். 'பாபா' பட பயமுறுத்தல், ரஜினியைத் தேர்தலின் போது செல்லாக் காசாக்கிக் காட்டியது. மருத்துவர் அய்யா எதிர் பார்த்தவாறே, திமுக தலைவரும், இது பற்றி பத்திரிகையாளர் கேட்டபோது, 'தமிழ் காக்க யார் குரல் கொடுத்தாலும் அதற்கு என் ஆதரவு உண்டு' என்றே சொல்லி இப்போதைக்கு நிறுத்திக் கொண்டார். அவருக்குத் தெரியும், ராமதாஸ் தன் அடிமடியில் கை வைக்கிறார் என்று. அவரது ஐம்பது வருட அரசியல் அனுபவம் அவருக்கு உண்டு. 'தமிழ் காக்கும்' கோசத்தை எதிர்க்கும் அப்பாவி அல்ல அவர்.

ஆக, மருத்துவர் அய்யாவும் திருமாவளவனும் ஒன்று சேர்ந்த தமிழ் பாதுகாப்பு இயக்கம் தொடங்கியுள்ள தமிழ் திரைப் படத்திற்கு ஆங்கிலப் பெயர் வைக்காதே என்ற மிரட்டல், தமிழ் பற்றியதல்ல, திரைப்படம் பற்றியதல்ல. தமிழ் கலாசாரப் பாதுகாப்ப் பற்றியதுமல்ல. இது ஓர் அரசியல் திட்டத்தின் நீளும் நிழல், தமிழ்த் திரைச் சுவரொட்டியில் படிந்துள்ள காட்சியே. தமிழ் நாட்டில் அரசியல் பேசினால், சினிமா முன்னால் வந்து குந்திக் கொள்ளும். சினிமா பற்றிப் பேசினால் அரசியல் வந்து முன்னால் குந்திக் கொள்ளும். தப்ப முடியாது. நாடு அந்த மாதிரி.

"பாய்ஸ்" என்றொரு சங்கர் படம். ஓர் ஆபாசமான, நமது பொதுப் புத்தியையும், கலை உணர்வை யும் குத்திக் குதறும் படம் அது. அதற்கு "பையன்கள்" என்றோ அல்லது "பசங்க" என்றோ பெயர் மாற்றி விட்டால் என்ன மாறிவிடும்?

படத்தின் தலைப்பு தமிழில் இல்லாது போனது தான் குறையா? அந்தக் குறை நீங்கி விட்டால் தமிழ் கலையும் கலாசாரமும் செழித்து ஓங்கி விடும் என்று மருத்துவர் அய்யா ராமதாஸோ, விடுதலைச் சிறுத்தை இயக்க தலைவர் திருமாவளவனோ நம்புவதாக யார் நம்புவார்கள்.

கருணாதியையும் தி.மு.க.வையுமே தான் நம்பியிருக்கிறோம் என்று தி.மு.க தலைமை நினைக்க விட்டு விடக்கூடாது என்ற திட்டமும் டாக்டர் அய்யாவுக்கு உண்டு. அதனால்தான் வன்னிய சமூகத்தின் பழம் பகையான திருமாவளவனை தன் கூட்டாளியாக சேர்த்துக் கொண்டதும், இருவரின் கூட்டு நடவடிக்கையாக, தமிழ் மக்களை உசுப்பி எழுப்ப வல்ல உணர்ச்சி பொங்க வைக்கும் ஒரு கொள்கைப் போராட்டம், வெற்றியை நிச்சயம் ஈட்டித் தரும் கொள்கைப் போராட்டம், இது காறும் திராவிடக் கட்சிகள் தம் ஏகபோகமாகக் கருதிவரும் ஒரு போராட்டம், தி.மு.க.வோ அதன் தலைவரோ சந்தேகம் கொண்டு வெளிப்படையாக எதிர்க்க இயலாத போராட்ட ஆயுதம், தமிழ், தமிழ், தமிழ்.




APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்




Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL



# அரங்காடலின் பன்னிரண்டாம் ஆற்றுகைகள்

*கடந்த மார்ச் 13ம் திகதி மார்க்கம் கலையரங்கில் நிகழ்த்தப்பட்ட 12ம் அரங்காடல் ஆற்றுகைகள் பற்றியதான பார்வைகள் சில வெளியானதின் பின்னர், மற்றுமொரு பார்வை அவசியந்தானா என்ற வினாக்களுக்கு மத்தியில் இவ் ஆய்வு நோக்கு எழுதப்படுகின்றது.*



*மாலை நிகழ்வு சரியாக 6:00 மணிக்கு பரபரப்புகள் ஏதுமற்று அமைதியாய் ஆரம்பமானது. அரங்கில் நரகோடு சொர்க்கம், அரியது கேட்கின், மறுமுகம், வதை என்ற நிகழ்வுகள் நேர்த்தியாய் ஆற்றுகைப்படுத்தப்பட்டன.*

*'நரகோடு சொர்க்கம்' குழந்தை சண்முகம் அவர்களின் அற்புதமான நாடகப்பிரதி. பரம்பரைத் தொடர்ச்சியாக குடும்பங்களோடு ஒன்றிணைந்த வீட்டின் உயிர்ப்பை நாடி பிடித்துப் பார்க்கும் பிரதி. அஃறிணைப் பகுப்பில் இருந்து வீடு தனைப் பிரித்தெடுக்கும் முயற்சி. உயிர்ப்பைச் சேதப்படுத்தும் தேசச் சிக்கல்களுக்குள் மனஞ் சிதறிப்போகும் மனிதர்களின் எண்ணங்களுக்குள் வீடு படும்பாடு. குடியிருக்கும் வீட்டை குழந்தைக்கும் மேலாய்ப் போற்றத் தோன்றுகின்றது. கதாபாத்திர உருவாக்கங்களும், பாத்திரங்களின் ஆழம்மிக்க சொற்பிரயோகங்களும் குழந்தையின் உயர்ந்த முதிர்வின் வெளிப்பாடுகள். திவ்வியராஜன் பிறழ்வு இல்லாமல் பிரதியைச் சுருக்கி நெறியாள்கை செய்திருக்கின்றார். அரங்கில் தோன்றியவர்கள் நிஜத்தை நேரில் கொண்டு வந்தார்கள். செயற்கைத்தனங்கள் இல்லாத சித்திரம். காட்சி நகர்வில் இருந்த விரைவற்ற தன்மை இயல்பா தவறா தெரியவில்லை.*

*'அரியது கேட்கின்' சகாப்தனின் கன்னிப் பிரதி. தொடர்ந்து எழுதலாம். ஆற்றல் அங்கீகாரத்துடன் வெளிபட்டிருக்கின்றது. வீரியமாக இல்லாமல் இயல்பை மீறியதாய் விரைந்தெழும் விஞ்ஞானத்தின் விகார முகங்களில் ஒன்றை மெல்லிய நகைக்சுவையோடு எடுத்தியம்பிய பிரதி. மனிதனை உருவாக்கும் அல்லது பிரதி எடுக்கும் 'குளோனிங்' அதி நவீனத்துவ அறிவியல் படைப்பில் 'எங்கோ தவறு நடந்து'விட, படைப்பு 'நரகவி' யாகி விடுகின்றது. முடிவில் படைத்தோரின் பாசத்தைச் சிதைக்கின்றது விலங்குவதை தடுப்புச் சட்டம். ஆற்றுகையை நிகழ்த்தியவர்கள் அரங்க அனுபவசாலிகள் போல் இயல்புற்றிருந்தார்கள். ஆனாலும் புதியவர்கள். நெறிப்படுத்திய சத்தியகுமார் ஜெயபால் கைவண்ணம் நடிப்பிலும் நகர்விலும் தெரிந்தது.*

*'மறுமுகம்'. இளந் தமிழ்க்கனடியர்களின் படைப்பு. தர்சினி வரப்பிரகாசம், சௌமியா தயாளன், பிரசாந்தி பத்மநாதன் என்ற இளையோரின் கூட்டாக்கமாக இசையியல் ஆற்றுகை அமைந்தது. அசைவு, இசை, ஒளி, குறைவான கூற்றுகள் இவையினூடாகவே மறுமுகத்தின் உள்முகம் உணர்த்தப்பட்டது. படைப்பாற்றலில் மட்டுமல்ல அரங்கிலும் உத்திகளாய்த் தோன்றி அசத்தியிருந்தார்கள் இளையவர்கள். குற்றவாளிகளைத் தண்டிக்கும் சமூகம் தனக்குள் இருந்தே குற்றவாளிகளைக் கண்டுகொள்கின்றது. தனக்குள் இருந்தே குற்றவாளிகள் உருவாகின்றார்கள் என்ற பின்னும் கூட காரணம் கண்டறிந்து குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்காமல் குற்றவாளிகள் உருவாகக் காரணமாகின்றது இச் சமூகம். தண்டனை வழங்கும்போது இதுவே நீதிபதியுமாகி விடுகின்றது. இளையோரின் படைப்பு என்பதினால் இக் கருவும் காட்சியும் உலக மனித குலத்துக்குப் பொதுவானதாகவும் அமைந்து விடுகின்றது. காட்சிகளின் தோன்றிய சிறுவன் ரிசான் பாராட்டப்பட வேண்டியவன். இவர்களிடமிருந்து இன்னும் எதிர்பார்க்க வைக்கின்றது இப்படைப்பு.*

# எழில்

*'வதை' மொழிபெயர்ப்பு நாடகம். மறியோ ஃபிறற்றியின் மூலப்பிரதியை புவியரசு தமிழாக்கம் செய்ய, அரங்க நெறியாள்கையைக் கையாண்டிருந்தவர் துசி ஞானப்பிரகாசம். சிலே நாட்டின் அதியுன்னத ஸ்பானியக் கவிஞர் பப்லோ நெருடா. நோபல் கவிஞன். இராணுவ ஆட்சிக்கு எதிரான பொதுவுடமைவாதி. புற்றுநோயால் பீடிக்கப்பட்டு இறப்பதற்கு சில வாரங்களுக்கு முன் ஒரு நாளில் அவர் கவிதைகளும் அவரும் கொல்லப்பட்ட துன்பியல் நிகழ்வின் இயல்பாக அரங்கில் வதை காட்சிப்படுத்தப்பட்டது. நெருடாவின் ஒற்றை உயிரைப் பறித்தெடுப்புதற்கு முன்னால் நச்சுச் சொற்களாலும், கவிதைகளின் உயிரைக் கண்முன்னால் நார்நாராகக் கிழித்தும் இராணுவ அதிகாரி செய்யும் கொடுமை ஈரம் நிறைந்த ஈழத்து நாட்களை நினைவுக்குக் கொண்டு வந்தது. சொற்களைக் குறைத்து பாவங்களாலேயே அதிகமாயப் பேசிய கே.எஸ் பாலச்சந்திரனின் ஆற்றல் அற்புதமாகப் பளிச்சிட்டது.*

*பங்காற்றிய அத்தனை கலைஞரும் பாரட்டப்பட வேண்டியவர்கள். இத்தகைய நிகழ்வை ஆற்ற இவர்கள் நேரம் ஒதுக்கியிருந்தமையே உயர்ந்த உணர்வாகும். இவர்கள் ஆற்றுகைகளில் குறை தென்படலாம். எனினும் நிறைகளை அழகாய்ச் சொல்லிவிட்டு மீண்டும் சிறப்பாய்ச் செய்யும் நோக்கில் குறைகளை உணர்த்தலாம். இவ்வாற்றுகையாளர்கள் நட்சத்திர அந்தஸ்து பெற்றவர்களும் அல்லர். விமர்சனம் எழுத பேனை பிடித்தோர் சுப்புடுவும் அல்லர்.*

*தான் பார்த்த நிகழ்வுகளை முழுமையாய் உணராது, விளங்கிக்கொண்ட தன்மைக்கேற்ப, தன் சுய சார்பு நிலைகளில் நின்று எழுதப்படுவது விமர்சனமாகாது. மாறாக, தவறான கருத்தூட்டலுக்குக் காரணமாகி எழுதுவோரின் எழுத்து நேர்மையை ஐயத்துக்குள்ளாக்கிவிடும். அத்துடன் அவர்களின் அறியாமையை அது புலப்படுத்திவிடும்.*

*மாறுபட்ட சுவைகளைத் தந்த நான்கு ஆற்றுகைகளும் நிறைவைத் தந்தன. மனவெளி கலையாற்றுக் குழுவின் அரங்காடல் ஆற்றுகைகள் புலம் பெயர்ந்த தமிழர் நாடக வரலாற்றில் நாடக வரலாறாகவே பதியப்படுகின்றன. இடையே சில தளர்வுகள் தென்பட்டபோதிலும் மீண்டும் புதிய பலத்துடன் அரங்காடல் எழுந்து நிற்கக் காண்கின்றோம். நாடக ஆற்றுகை வளர்ச்சியின் எல்லாத் தளங்களிலும் புதிய உள்வரவுகளை ஏற்று அங்கீகரித்தலே காத்திரமான வளர்ச்சியாகும். இது அரங்காடலில் தெரிகின்றது. தடைகளில் இடரினும் மீண்டும் எழுந்து பயணிக்கின்ற ஆற்றலே வளர்ச்சியின் வலிமையாகும்.*

*தொடர்ச்சிகளில் எம் கணிப்புகளும் கணம் பெறும்.*




# “சிறுகதை என்பது ஒரு நீண்ட கயிற்றின் நடுவில் ஒரு சிறு துண்டை வெட்டித் தருவது போன்றதுதான்”

அ. முத்துலிங்கத்.துடன் நேர்காணல்

*• உங்கள் சிறுகதை எப்படி உருவாகிறது? ஒற்றை வார்த்தையிலா, படிமத்திலா, கருத்திலா, நிகழ்வு நோக்கிலா? சிறுகதைகளின் ஆதாரத்தூண்டல் எப்படி நிகழ்ந்திருக்கிறது?*

‘உண்மையில் அநேகமாக ஒரு வார்த்தையில் அல்லது ஒரு வசனத்தில் ஏற்பட்ட அகத் தூண்டுதலில்தான் என் படைப்புகள் ஆரம்பமாயிருக்கின்றன. அபூர்வமாக சில சம்பவங்களும் ஆரம்பத்துக்கு காரணமாக இருந்திருக்கின்றன. ஆனால் பெரும்பாலும் வார்த்தைகள்தான். ஒரு வார்த்தை சிலவேளை என்னை எங்கேயோ தூக்கிப் போய்விடும்.

சிறு வயதில் நாங்கள் “கொழுத்தாடு பிடிப்பேன்“ என்று ஒரு விளையாட்டு விளையாடுவோம். அதையே ஒருவர் சொன்னபோது அது நல்ல தலைப்பாகப் பட்டது. அதை வைத்து சிறுகதை படைக்கும்போது சம்பவங்களும் அனுபவங்களும் தானாகவே வந்து சேர்ந்துகொள்ளும். ஒருமுறை ரயிலில் பயணம் செய்தபோது இளம் தம்பதிகள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். அவள் சொன்னாள் “அடுத்த புதன்கிழமை உன்னுடைய முறை“. அதை திருப்பி சொல்லிப் பார்த்தேன். நல்லாக இருந்தது. அவள் என்ன சொல்லியிருப்பாள். அப்படி பிறந்ததுதான் அந்த கதை. உங்களுக்கு வரும் வெளிநாட்டு தொலைபேசியை எடுத்துக்கொள்ளுங்கள். அநேகமாக முதல் வசனம் “அங்கே இப்ப என்ன நேரம்?“ என்றுதான் இருக்கும். இதுவே ஒரு நல்ல கதைக்கு ஆரம்பம்.

கனடா எழுத்தாளர் பெஸ்மொஸ்கிஸ் ஒருமுறை பழைய சாமான்கள் விற்கும் இடத்துக்கு போயிருக்கிறார். அங்கே ovulation thermometer ஒன்று விற்பனைக்கு இருந்தது. (இந்த வெப்பமானி பெண்ணின் வெப்ப நிலையை தினமும் அளப்பதற்கு உதவும். வெப்பநிலை உச்சம் அடையும் சமயம் கருமுட்டை வெளிப்படும். அந்த நேரம் உடலுறவு வைத்தால் பிள்ளை பிறக்கும் சாத்தியக்கூறு அதிகம்). இவர் அதைத் திறந்து பார்த்தபோது உள்ளே தேதிகளும், வெப்ப அளவுகளும், உடலுறவு கொண்ட குறிப்புகளும் கவனமாக எழுதி வைக்கப்பட்டிருந்தன. விற்பனையாளர் அதை அகற்ற மறந்துவிட்டார்.

எழுத்தாளர் தான் அதை ஒரு கதையாக எழுதப் போவதாகச் சொன்னார். இந்த வருட முடிவிற்கிடையில் அவர் எழுதாவிட்டால் அதை திருடி நான் எழுதுவதாக இருக்கிறேன்.

*•ஆங்கில சிறுகதைகளோடு ஒப்பிடும்போது தமிழ் சிறுகதையின் தரம் எப்படி இருக்கிறது? சர்வதேச தரத்தை தமிழ் சிறுகதைகள் எட்டுவதற்கு என்ன தடைகள்? அப்படி உலகத் தரம் என்று ஒன்று உண்டா? அதை யார் தீர்மானிக்கிறார்கள்?*

சிறுகதை என்பது ஒரு நீண்ட கயிற்றின் நடுவில் ஒரு சிறு துண்டை வெட்டி தருவது போன்றதுதான். அதற்கு முன்னும் கிடையாது பின்னும் கிடையாது. தாகூர் ஒரு காலத்தில் எழுதி பிரபலமான சிறுகதைகள் சிலவற்றை இன்று சிறுகதை என்று ஒப்புக்கொள்ளவே முடியாது. தமிழ் நாட்டில் புதுமைப்பித்தன் சிறுகதையின் ஆதார முடிச்சைக் கண்டுபிடித்து உறுதியான ஒரு வடிவம் கொடுத்தார். இன்று வரை அவருடைய சிறுகதைகளில் பல உலகத் தரத்துடன்தான் இருக்கின்றன. காலத்தால் மாறாமல் இருக்க வேண்டுமெனில் சிறுகதைக்கு சில ஆதார அம்சங்கள் இருப்பது அவசியம். வாசிப்பு தன்மை, புதியதைச் சொல்லல். ஏதோவிதத்தில் மனத்தில் இடம் பிடித்துவிடும் தன்மை, கடைசி வசனம் முடிந்த பிறகும் கதை முடியாமல் மனதில் ஓடிக் கொண்டிருப்பது. இப்படியான குணங்கள் என்று சொல்லலாம்.

ஆனால் இதிலே எங்களைப் பிரமிக்க வைக்கும் ஒரு விசயம் இருக்கிறது. 19ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் எட்கார் அலன்போ இங்கிலாந்தில் சிறுகதைகளை எழுதித்தள்ள அதைத் தொடர்ந்து பிரான்ஸ்சில் மாப்பாசன் சிறுகதைக்கு புதிய மெருகு கொடுக்கத் தொடங்கிவிட்டார். தமிழ் நாட்டில் வ.வே.சு ஐயரின் ‘குளத்தங்கரை அரசமரம்’ இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்திலேயே வெளிவந்துவிட்டது. இன்னும் இருபது வருடங்களில் புதுமைபித்தனும் எழுதத் தொடங்கிவிட்டார். பார்க்கப்போனால் ஒரு 70 - 80 வருட வித்தியாசம்தான். மேல்நாட்டில் அவர்கள் தீட்டிக் கூர்பார்க்கும்போதே இங்கே உலகத்தரமான கதைகளை புதுமைப்பித்தன், கு.ப.ரா, இலங்கையர்கோன் போன்றவர்கள் படைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

உலகத் தரம் என்பது மாறிக்கொண்டே இருக்கும் ஒன்று. ஒரு காலத்தில் சிறுகதை மன்னன் என்று அறியப்பட்ட ஓ ஹென்றி போல இப்பொழுது ஒருவரும் எழுதுவதில்லை. உலகத்து நல்ல சிறுகதைகள் எல்லாம் அவ்வப்போது ஆங்கிலத்தில் வெளிவருகின்றன. ஆகவே அவற்றை தொடர்ந்து படிப்பதால் நாம் தரமான சிறுகதைகளைப் பற்றி ஓரளவுக்கு தெரிந்து கொள்ள முடியும். நாம் கன தூரம் போகத்தேவை யில்லை. கனடாவில் ஓர் எழுத்தாளர் இருக்கிறார். பெயர் Alice Munro. இவருடைய speciality சிறுகதைதான். கடந்த ஐம்பது வருடங்களாக எழுதி வருகிறார். ஆளுநர் பரிசு மூன்று முறையும் கில்லர் பரிசு இரண்டு தடவையும் பெற்றவர். 2004ம் ஆண்டு கில்லர் பரிசு அவருக்கே கிடைத்தது. உலகத்து தற்போதைய சிறுகதை எழுத்தாளர்களை வரிசைப் படுத்தினால் இவர் முதல் பத்துக்குள் வருவார் என்று நினைக்கி றேன். இவர் சொல்கிறார் தான் ஒரு 70 பக்க கதையை ஒரு மாத காலமாக எழுதினாராம். ஆனால் முடிவில் திருப்பி படித்தபோது அதனுடைய tone நல்லாக இல்லையாம். ஆகவே அதை அப்படியே தூக்கி எறிந்துவிட்டார்.

இப்படி நுட்பமாக தங்கள் எழுத்துக்களை யார் பார்க்கிறார்கள்? மேல்நாடுகளில் சிறுகதை எழுதும் முறையை கல்லூரிகளில் சொல்லித் தருகிறார்கள். கவிதைக்கு அடுத்தபடி கஸ்டமானது சிறுகதை. நாங்கள் அதைப் படைக்கும்போது அதற்கு வேண்டிய மரியாதை தருவதில்லை. அவர்கள் ஒரு சிறுகதையை எழுதி முடிக்க சராசரி 4 - 6 வாரங்கள் எடுப்பார்கள். எங்களில் மூன்று மணி நேரத்தில் எழுதிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள்.

*• தொடர்ந்து படைக்கும் படைப்பாளி திரும்பத் திரும்ப ஒன்றையே எழுதுகிறார் என்று குறிப்பிடுகிறீர்கள். அனுபவம், கற்பனை வளம் குறைந்தவர்களுக்கு மட்டுமே அமைந்த குணாம்சம் அல்லவா அது?*

அமெரிக்காவின் வாசகர் வட்டத்தில் ஒன்று பேசிக்கொள்வார்கள், “இரண்டாவது நாவலை தாண்டவேண்டும்’ என்று. முதல் நாவல் சுலபமானது, இரண்டாவதுதான் கஸ்டம். அதைத் தாண்டிய பிறகுதான் ஒருவர் உண்மையான எழுத்தாளராக அங்கீகரிக்கப்படுகிறார்.

சிலருடைய ஆரம்பகாலப் படைப்புகள் அமோகமாக இருக்கும். கால ஓட்டத்தில் வரும் மீதிப் படைப்புகள் தேய்ந்து தெரியாமல் போய்விடும். ஜும்பா லாஹரியின் முதல் படைப்பு வெளிவந்தபோது உலகம் நிமிர்ந்து பார்த்தது. அவருடைய புத்தகத்துக்கு புலிட்ஸர் பரிசு கிடைத்தது. எல்லோரும் இரண்டாவது படைப்புக்கு காத்திருந்தார்கள். வந்தது. மிகச் சாதாரணம், தோல்வி என்றே சொல்லலாம். ஆரம்ப வேகம் இல்லை. பதிப்பாளர்களுக்கும் இது தெரியும். ஆகவே அவர்கள் இரண்டாவது பதிப்பில் கவனமாக இருப்பார்கள்.



எழுத்தாளருடைய முதல் பதிப்பு அநேகமாக சுயசரிதைத் தன்மையுடன் இருக்கும். தன் சொந்த அனுபத்தில் இருந்து படைப்பதால் அதற்கு ஒரு பலம் இருக்கும். நம்பிக்கைத் தன்மை இருக்கும். இரண்டாவது படைப்பில் எழுத்தாளன் தன் மூளையை பாவிக்க ஆரம்பித்து விடுகிறான். உலகத்து திறமான இலக்கியங்கள் எல்லாம் ஆரம்ப வேகத்தில் படைக்கப்பட்டவை தான். பின் வந்த படைப்புகள் ஆரம்ப காலத்து படைப்புகளுக்கு ஈடாக இருப்பதில்லை.

ஹார்ப்பர்லீ என்பவர் ஒரே ஒரு புத்தகம் எழுதி உலகப் புகழ் பெற்றார். அவர் இரண்டாவது புத்தகம் எழுதவே இல்லை. ஐஸாக் டெனீசனின் முதல் நாவல் Out of Africa உன்னதமானது. அவர் அடுத்து எழுதியவை எல்லாம் அந்த உச்சத்தை எட்டவில்லை.

இவை எல்லாம் பொதுவான விதிகள்தான், விதிவிலக்குகள் உண்டு. எழுத்தாளர் தன்னை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். புதிய வாசிப்பு, புதிய அனுபவங்கள், பயணங்கள் போல எழுத்தை விசாலிக்கச் செய்ய வேறு ஒன்றுமே இல்லை. புது உலகம், புதிய மனிதர்கள் புதிய அனுபவங்கள் புதிய

சிந்தனைகள். தான் சேர்த்து வைத்த அனுபவங்கள் போதும் என்று ஒரு எழுத்தாளன் தன்னைப் பூட்டி வைத்துக்கொண்டு படைக்கும் போது எழுதியதை திரும்ப எழுத நேரிடும்.

*• இலக்கியத்தின் சமூகச் செயல்பாடு என்ன?*

எழுத்தாளன் என்பவன் சமூகத்தில் வாழ்கிறான். எனவே அவன் எழுத்து சமூகத்தில் ஏதோ ஒரு விதத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் எழுத்தாளன் காலையில் எழும்பி இன்று நான் சமூகத்தில் நடக்கும் இந்த அநீதியை உடைக்க ஒரு கதை எழுதவேண்டும் என்று தீர்மானித்து எழுதினால் அது கலைப்படைப்பாக உருவாக முடியாது. எழுத்து இயற்கையாக அமைய வேண்டும். சமுதாயப் பார்வை என்ற கல்லை அதில் கட்டி தொங்கவிட்டால் அது படைப்பை இழுத்து நிறுத்திவிடும் அபாயம் உண்டு.

அம்பையினுடைய ‘வீட்டின் மூலையில் ஒரு சமையலறை’ என்ற கதையை எடுங்கள். அதில் எங்கேயாவது சமுதாயத்தை சீர் திருத்தவேண்டும் என்ற தொனி இருக்கிறதா? இல்லை. ஆனால் அந்தக் கதையை படித்து முடித்த வாசகரை அது சிந்திக்க வைக்கிறது. பெண்களுடைய அடிமை நிலை பற்றிய பிரச்சாரம் கிடையாது. அதுதான் வெற்றி.

“பெரும் சத்தத்துடன் கதவு மூடியது“ என்ற கடைசி வரியுடன் இப்சனின் நாடகம் முடிவுக்கு வந்தபோது பெண்களை சிறைப்படுத்திய பெருங்கதவு ஒன்று திறந்துகொண்டது.

*• நீங்கள் ஒரு படைப்பாளியாகவும், வாசகனாகவும் இருக்கிறீர்கள். பல படைப்பாளிகள் அப்படி இல்லையே? கட்டாயம் வாசிக்க வேண்டுமா? உண்மையான அனுபவ அடிப்படையில் எழுதும் படைப்பாளிக்கு அது அவசியமா?*

படைப்பாளியாக இருப்பதிலும் பார்க்க ஒரு நல்ல வாசகராக இருப்பது மிகவும் கஸ்டமானது. ஏனென்றால் தொடர்ந்து வாசிப்பது மிகவும் கடினமானது. அதுவும் நல்ல புத்தகங்களை தேடிப்பிடிப்பது இன்னும் சிரமமான காரியம். வாசிப்பின் தரம் உயர உயர இந்த வேலை இன்னும் கடுமை அடையும்.

என்னுடைய கேள்வி இதுதான். வாசிப்பு இல்லாமல் ஒரு படைப்பாளி தோன்றியிருக்க முடியுமா? இல்லை. அப்படியானால் அந்த படைப்பாளி எப்பொழுது தன் வாசிப்பை நிறுத்துகிறார். தான் எல்லாவற்றையும் கற்று தேர்ந்தாகிவிட்டது. இனி கற்பதற்கு ஒன்றுமில்லை என்ற நிலைமை ஏற்பட்டபோதா?

கற்பதற்கு எல்லையே இல்லை. வாசிப்பு படைப்பாளியாவதற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் படைப்பாளி என்ற ஸ்தானத்தை தக்க வைப்பதற்கும். உலகத்தின் தலை சிறந்த எழுத்தாளர்கள் எல்லாம் கணிசமான நேரத்தை வாசிப்பதில்தான் இன்னமும் செலவழிக்கிறார்கள்.

ஒரு மனிதனின் உடம்பில் உள்ள செல்களில் 98 வீதம் ஒருவருட காலத்தில் தன்னைத்தானே புதுப்பித்து கொள்கிறது என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அதுபோல எழுத்தாளனும் நித்தம் தன்னை புதுப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும். உங்கள் காரின் ரோட்டு லைசென்ஸை வருடா வருடம் புதுப்பிப்பது போல.

நன்றி - காலம்




# முரளியின் மனம் கவர்ந்த மலர்!

## முரளி மதிமலர் திருமணம்




கடந்த நவம்பர் மாதத்தில் இருந்து உலகின் தலைசிறந்த கிரிக்கெட் பந்து வீச்சாளர் முரளிதரன் போக்கில் பல மாற்றங்கள்! தமிழன் என்று நாம் தலை நிமிர்ந்து பெருமைப் பட்டுக் கொண்டாலும் சிங்கள ஊரில் பிறந்து, சிங்கள நண்பர்களுடன் வளர்ந்து பெரும்பாலும் சிங்கள மொழியே பேசித் திரிந்த இந்த தமிழ் வாலிபன் முரளியின் போக்கில் கடந்த ஐந்து மாதங்களில் பெரும் மாற்றம்! அடிக்கடி வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்கின்றார்! நெல்லியடியில் உள்ள தனது தகப்பனாரின் வியாபாரத்தலத்திற்கு அடிக்கடி பயணம் செய்கின்றார்! அடிக்கடி தமிழில் உரையாடு கின்றார். சுனாமியின் பின்பு தமிழ் குழந்தை களுக்கு பல உதவிகளை செய்து வருகின்றார். தமிழ் விடுதலைப் போராளிகளை போய் நேரில் சந்திக்கின்றார். முரளியின் இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணம் தமிழ் மகள் மதிமலர் தான் காரணம் என்று கூறலாமா?! ஆனாலும் முரளியின் இனிவரும் வெற்றிகளுக்கெல்லாம் மதிமலர் நிட்சயம் காரணமாக இருப்பார் என்று மட்டும் நிச்சயமாக நம்பலாம்!! முரளி-மதிமலர் தம்பதிகளுக்கு விளம்பரம் பத்திரிகை சார்பில் திருமண நல்வாழ்த்துக்கள்.

இலங்கை கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளீதரன் (33), சென்னை மலர்மருத்துவமனை நிர்வாக இயக்குநர் மதிமலர் (24) திருமணம் சென்னையில் நடைபெ-பற்றது. எழும்பூர் ராணி மெய்யம்மை திருமணமண்டபத்தில் நடைபெற்ற திருமண நிகழ்ச்சியில் இலங்கை மற்றும் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள், முக்கியப்பிரமுகர்கள் கலந்து கொண்டனர். முரளீதரன் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர், திருச்சியை பூர்வீகமாக கொண்ட அவரது குடும்பத்தினர் இலங்கையில் குடியேறி அங்கேயே நிரந்தரமாக தங்கிவிட்டனர். மணப்பெண் மதிமலர் மறைந்த டாக்டர் எஸ். ராம மூர்த்தியின் 2-வது மகள். மலேசிய தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த இவர்களது குடும்பம் சென்னையில் நிரந்தரமாக குடியேறிவிட்டது. ரெஸ்ட் கிரிக்கெட்டில் 532 விக்கெட்டுகளைக் கைப்பற்றி 2-வது இடத்தில் முரளீதரன் உள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற மூன்றாவது கிரிக்கெட் ரெஸ்ட் போட்டியில் பரபரப்பான வெற்றியைப் பெற்று, 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என சமன் செய்தது பாகிஸ்தான்.

போட்டியை சமன் செய்யும் நோக்கிலேயே பெரும்பாலும் விளையாடிய கங்குலி அணி 214 ஓட்டங்களுக்கு இரண்டாவது இன்னிங்ஸை இழந்து, 168 ஓட்டங்களில் தோல்வியுற்றது. இவ்வெற்றி மூலம் கல்கத்தாவில் (195 ஓட்டங்கள் வித்தியாசம்) பெற்ற தோல்விக்குப் பழிதீர்த்துக்கொண்டது இன்சமாம் அணி. மொகாலியில் நடைபெற்ற முதல் ரெஸ்ட் சமன் ஆனது.

எதிர்பாராத திருப்பம் - 383 ஓட்டங்களைச் சேர்த்தால் வெற்றி பெறலாம் என்ற இலக்குடன் 2-வது இன்னிங்ஸைத் தொடங்கத் தள்ளப்பட்ட இந்தியா, நான்காவது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 25 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. காம்பீரும், சேவாக்கும் நம்பிக்கையான ஆட்டத்தை அளித்துவந்தனர். ஐந்தாவது கடைசி நாள் ஆட்டத்தைத் தொடங்கி இருவரும் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் காம்பீரின் தவறான அழைப்பால், தடுமாறிய சேவாக், 'ஆட்டமிழந்தது' ஆட்டத்துக்கு திருப்பமாக அமைந்தது. இதனால் நல்ல ஃபார்மில் இருந்த சேவாக் 38 ஓட்டங்களுடன் வெளியேற வேண்டியதாயிற்று. முதல் விக்கெட்டுக்கு காம்பீர், சேவாக் ஜோடி 87 ஓட்டங்களைக் குவித்து பாகிஸ்தான் வீரர்களுக்கு 'கிலி'யை ஏற்படுத்தினர்.

கிடுகிடு சரிவு - அதன் பிறகு காம்பீரும் ஆட்டமிழந்தார். அவர் 52 ஓட்டங்களைச் சேர்ந்திருந்த போது சமி வீசிய பந்தில் எல்பிடபிள்யூ ஆகி வெளியேறினார். பின்னர் திராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார் சச்சின். வழக்கத்துக்கு மாறாக தற்காப்பு ஆட்டத்தை அவர் மேற்கொண்டார். அதேசமயம் பெரும்பாலான வீரர்களை மட்டையாளருக்கு அருகிலேயே நிற்கவைத்து பீல்டிங்கை இறுக்கினார் அணித்தலைவர் இன்சமாம். என்றாலும் அடிக்க வேண்டிய பந்துகளைக் கூட சச்சின் உள்ளிட்டோர் தைரியமாக எதிர்கொள்ளாமல், பாதுகாப்பு ஆட்டத்தை

**எஸ். கணேஷ்**

மேற்கொண்டனர்.
சச்சின் உள்ளிட்டோர் வெகுநேரம் களத்தில் இருந்தாலும் அணியின் ஓட்டஎண்ணிக்கை உயரவில்லை. திராவிட்டும், சச்சினும் தலா 16 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தனர். அதன்பிறகு இருந்த நம்பிக்கையும் பொய்த்தது. வழக்கமாக 'கட்டை' போடும் லக்ஸ்மணனும் சோபிக்காமல் போக, பாகிஸ்தானுக்கு வெற்றி பிரகாசமடைந்தது.

கும்ப்ளே 37 ஆட்டமிழக்கவில்லை - ஒரு கட்டத்தில் 7 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்களைச் சேர்த்து நிலைகுலைந்திருந்தது இந்தியா. இந்நிலையில் கடைநிலை வீரரான கும்ப்ளே தைரியமாக ஆடி, அணியைத் தோல்வியிலிருந்து மீட்க முற்பட்டார். ஆனால் சகவீரர்கள் பாகிஸ்தான் பந்துவீச்சைத் தாக்குப் பிடிக்காததால் கும்ப்ளே 37 ஓட்டங்களுடன் நிற்க வேண்டியதாயிற்று. நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 6 ஓவர்கள் மட்டுமே மீதமிருந்த நிலையில் இந்தியா தோல்வியை தழுவியது.

அஃப்ரிதி சிறப்பு - வெற்றிக்கு பாகிஸ்தான் வீரர்களில் ஒருங்கிணைந்த ஆட்டமே காரணம் என்றாலும், சுழல்பந்து வீச்சாளர் அஃப்ரிதியின் ஆட்டம் அதற்கு கூடுதல் சிறப்பு சேர்த்திருந்தது. சச்சின், கங்குலி, லக்ஸ்மன் ஆகிய முக்கிய விக்கெட்டுகளை அவர் வீழ்த்தினர். அதற்காக 13 ஓட்டங்களை மட்டுமே அவர் கொடுத்தார். சமி, கனேரியா, அர்ஷாத் கான் கணக்கில் தலா 2 விக்கெட். இத்தோல்வியால் இந்தியா தொ-டரை இழந்தது மட்டுமல்லாமல், ஐசிசி தரப்பட்டியலில் கிடைக்க வேண்டிய முன்னேற்றமும் கிடைக்காமல் போனது. சமன்செய்தால் கூட இங்கிலாந்தைப் பின்னுக்குத் தள்ளியிருக்க முடியும். தோல்வியுற்றதால் 3-வது இடத்திலேயே இருக்க வேண்டியதாயிற்று.

சேவாக் தொடர் நாயகன் - வீரேந்திர சேவாக் தொடர் நாயகனாகவும், யூனிஸ் கான் ஆட்ட நாயகனாகவும் தேர்வு பெற்றனர்.100-வது ரெஸ்டில் சதமடித்த 5-வது வீரர் இன்சமாம்.

தனது 100-வது ரெஸ்ட் போட்டியில் சதமடித்த 5-வது வீரராகத் திகழ்கிறார் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் இன்சமாம் உல் ஹக். பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் மார்ச் 25 தொடங்கிய இந்தியாவுக்கு எதிரான 3-வது மற்றும் கடைசி ரெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இச் சாதனையை புரிந்தார் இன்சமாம். பாகிஸ்தான் சார்பில் 100 ரெஸ்ட் போட்டிகளில் விளையாடும் 4-வது வீரராகத் திகழும் இன்சமாம், தனது 21-வது சதத்தை எட்டினார்.

இதற்கு முன்பு 100-வது ரெஸ்ட் போட்டிகளிலி சதமடித்தவர்கள் - கோலின் கோட்ரி (இங்கிலாந்து), 1968இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 104 ஓட்டங்கள்.

ஜாவீத் மியான்தத் (பாகிஸ்தான்), 1989-90 இல் இந்தியாவுக்கு எதிராக 145 ஓட்டங்கள்.
கார்டன் கிரீனிட்ச் (மேற்கிந்திய தீவுகள்), 1990 இல் இங்கிலாந்துக்கு எதிராக 149 ஓட்டங்கள். அலெக்ஸ் ஸ்டுவர்ட் (இங்கிலாந்து), 2000இல் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக 105 ஓட்டங்கள்.



# கனடாவில் ஆழிப்பேரலை மீள்கட்டமைப்புச் செயலணி உதயம்

01ம் பக்கத் தொடர்ச்சி

இக் கனடியச் செயலணியானது, தாயகத்தில் மீள்கட்டமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்புடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் இருந்து செயற்றிட்டங்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. இங்கு வாழும் தனிநபரோ, குடும்பங்களோ அல்லது நிறுவனங்களோ இச் செயற்றிட்டங்களை முழுமையாகவோ அல்லது சிறு பகுதிகளாகவோ பெற்றுக் கொண்டு இச் செயலணியினூடாக அவர்கள் பெயரிலேயே செயற்படுத்த முடியும்.

இவ்வகையில் முதற்கட்டமாக, பாதிப்புக்குள்ளான சுண்டிக்குளம் கிராமத்தில் உடனடியாக 50 குடும்பங்களை மீளக் குடியேற்றும் நோக்கில் அவர்களுக்கான நிரந்தர வீடுகளைக் கட்டிக் கொடுத்து, மீன்பிடி வள்ளங்கள், வலைகள், மற்றும் உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதனையே முதற்கட்டச் செயற்பாடாகச் செயலணி கொண்டுள்ளது. இதற்கான நிதியினை ஏப்ரல் 30 திகதிக்குள் திரட்டும் நோக்கில் செயலணியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தாயக மீள்கட்டுமானத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அனைவரும் இச் செயலணியோடு இணைந்து இதனூடாகச் செயற்படுமாறு இச் செயலணி வேண்டிக் கொள்கின்றது.

2347 Eglinton Ave. E, Scarborough என்ற முகவரியில் இயங்கும் பணிமனையுடன் தொடர்பு கொண்டு தகவல்கள் பெறமுடியும். அழைப்பு இல. 647 298 3712 -- 647 999 3353




*பாதிப்புக்குள்ளான சுண்டிக்குளம் கிராமத்தில் உடனடியாக 50 குடும்பங்களை மீளக் குடியேற்றும் நோக்கில் அவர்களுக்கான நிரந்தர வீடுகளைக் கட்டிக்கொடுத்து, மீன்பிடி வள்ளங்கள், வலைகள் மற்றும் உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதனையே முதற்கட்டச் செயற்பாடாக இச்செயலணி கொண்டுள்ளது. இதற்கான நிதியினை ஏப்ரல் 30ஆம் திகதிக்குள் திரட்டும் நோக்கில் செயலணியின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

# சுமாத்திராவில் பூகம்பம்....

01ம் பக்கத் தொடர்ச்சி

இந்த பூமி அதிர்ச்சிக்கான காரணம், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ம் திகதி ஏற்பட்ட பூமி அதிர்ச்சியேயாகும். இந்த அதிர்ச்சியின் விளைவாக சுனாமி பேரலைகள் எழுந்து இரண்டு இலட்சம் மக்களை பலி எடுத்தது.

கடந்த திங்கள் இடம் பெற்ற பூமி அதிர்ச்சியின் காரணமாக கடல் படுக்கை மேல் எழுந்துள்ளது என்றும், பூமியின் ஒரு தகடு கீழ் இறங்கி விட்டது என்றும் அவுஸ்ரேலியாவின் மண்ணியல் விஞ்ஞானத் துறை சார்ந்த பூகம்ப ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

டிசம்பர் மாதம் இடம் பெற்ற பூமி அதிர்வால் பூமியின் அழுத்தம் அதிகரித்துள்ளது என்றும், இப்போ மறுபடியும் ஏற்பட்டுள்ள பூமி அதிர்வால் இந்த அழுத்தம் மேலும் அதிகரித்துள்ளது என்று பூகம்ப ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். இதனால் மூன்றாவதான ஒரு பாரிய பூகம்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படி ஒரு பூகம்பம் ஏற்படும் போது சுனாமி அலைகள் எழுவதற்கான சந்தர்ப்பங்களும் சாத்தியங்களும் உள்ளது.

இது எப்போது ஏற்படும் என்று விஞ்ஞானிகளுக்குத் தெரியவில்லை. அடுத்த மூன்று மாதங்களுக்குள்ளும் ஏற்படலாம், அல்லது 20, 50 வருடங்களுக்குள்ளும் ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

# புதிதாக நிர்மாணிக்கும் வீடுகள் வாங்கும்போது அவதானிக்க வேண்டியவை

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

இன்றைய காலகட்டத்தில் புதிதாக நிர்மாணிக்கும் வீடுகளையே அதிக மக்கள் விரும்பி வாங்குகிறார்கள். புதிதாக நிர்மாணிக்கும் வீடுகளின் விலை அதே




அளவான (Same size) பாவித்த வீடுகளை விட விலை அதிகமாக இருந்தபோதும், வாங்குபவர்கள் புதிய வீட்டையே விரும்புகிறார்கள். இதற்கு பல காரணங்களை முன்வைக்கின்றார்கள். உதாரணமாக, புதிய வீடுகளின் அமைப்பு, பாவிக்கப்படும் பொருட்களின் புதியதன்மை, பாவித்த வீடுகளை முந்திய வீட்டு உரிமையாளர்களின் கவனமற்ற பாவிப்பினால் ஏற்பட்ட பழுதுகள், கவனமற்ற பூச்சுகள், பொருத்தமற்ற நிலவிரிப்புகள் மற்றும் பூச்சுகளின் நிறங்கள். புதிய வீடுகளானால் குறிப்பிட்ட காலத்திற்கு பெரிதாக திருத்த வேலைகளை தவிர்க்கலாம் போன்றவற்றை கூறகின்றனார்கள். புதிய வீடுகள் வாங்கும் போது பிரச்சினைகள் இல்லை எனவும் கூறமுடியாது. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளிலும் பல சிக்கல்களும் திருத்தவேலைகளும் வருவதற்கும் இடம் உண்டு என்பதனையும் மறத்தல் கூடாது. கூரையினால் தண்ணீர் வடிதல், சாளரங்களின் ஓரங்களினால் தண்ணீர் உள்ளே கசிதல், நிலச்சுவர்களில் ஏற்படும் வெடிப்புகள், Floor களில் பாவிக்கப்பட்ட பலகைகளில் ஏற்படும் கிறீச் என்ற சத்தம் இவற்றைப் போல் பலவற்றை சொல்லிக் கொண்டே போகலாம்.

பொதுவாக புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகளை வாங்கும்போது எவற்றை நாம் கவனிக்க வேண்டும் என்பனவற்றைப் பற்றி பார்ப்போம்.

1. வீடு நிர்மாணிக்கும் நிறுவனம் - வீடு நிர்மாணிக்கும் நிறுவனம் மிக முக்கியமானது. இதே நிறுவனம் எவ்வளவு காலமாக வீடுகட்டும் தொழிலில் செயல்படுகின்றது. பொதுவாக குறிப்பிட்ட நிறுவனத்தைப்பற்றிய எண்ணம். நீங்கள் வீடுவாங்க இருக்கும் வீட்டு கட்டிட நிறுவனத்தையும் அதனுடன் தொடர்பு உள்ளவர்களையும் பற்றிய தகவல்கள் அறிதல் சிறந்ததாக கருதப்படுகின்றது.

2. குறிப்பிட்ட நகரசபையின் கட்டிட விதிகள் - புதிய வீடுகள் யாவும் சரியாகத்தான் கட்டப்படுகின்றது என்று கருதுவது சரியல்ல. புதிதாக கட்டப்படும் வீடுகள் நகரசபையின் கட்டிடத்திற்குரிய விதி முறைகளிற்கமையவே நிர்மாணிக்கப்பட வேண்டும். இருந்தும், சில வீடு கட்டுனர்கள் அதன்படி செய்வதில்லை. சிலவற்றை மறைத்தும் செய்துவிடுவார்கள். வீட்டின் முக்கிய பகுதிகள் கட்டி முடியும் போது, Building Inspector இன் அனுமதி பெற்ற பின்பே அடுத்தபடியிற்கு போகவேண்டும். பல நகரசபைகளில் சில குறிப்பிட்ட Inspectors இருப்பதால் ஒழுங்காக கவனிக்காமல் போகக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

3. கையொப்பமிடுதல் - ஆதனங்கள் வாங்கும் போது நாம் ஒப்பிடும் பத்திரங்கள் யாவும், வீடு நிர்மாணிக்கும் நிறுவனத்தின் சட்ட வல்லுனரினால் தயாரிக்கப்பட்டது. ஒப்பமிட முன்பு ஆதனமுகவரை உங்களுடன் அழைத்து செல்வது நல்லது. அப்படி வசதி கிடைக்காவிட்டால், சகல பத்திரங்களையும் உங்களுடைய சட்டவல்லுனரினால் வாசித்து தேவையானால் திருத்தம் செய்வது நல்லது. இதனால் எதிர்காலத்தில் ஏற்படபோகும் பிரச்சினை, சிக்கல்கள் ஆரம்பத்திலேயே தவிர்த்து கொள்ளலாம்.

4. வீட்டுப் பரிசோதனை - Home Inspections: - வீட்டுத் திறப்பு எமக்கு கிடைக்கு முன்பு Pre Delivery Inspection (PDI) எனப்படும் வீட்டு சோதனைக்கு கட்டுனர் அழைப்பார். அப்பொழுது Home Inspector, Real Estate Agent, Engineer, Architecture அல்லது வீட்டு நிர்மாணத்துறையில் அனுபவம் மிக்கவர் ஒருவரை உங்களுடன் அழைத்து செல்வது நல்லது. அனுபவப் பட்டவர்களால் உங்கள் சுமையை குறைக்க முடியும்.

வீடுகளில் இருக்கும் குறைபாடுகளைக் கண்டு அதனைத் திருத்திக்கொள்ளலாம். சில திருத்த வேலைகளை ஆரம்பத்திலே திருத்திக்கொள்வது நல்லது.




**Neilson/Sheppard**



Detached 2-Story
3+1 Bedrooms, 3 washrooms
Finished Basement with Separate Entrance

**$269,900**

**Markham/Highglen**




Brand New Condo Apt.
5 New Appliances
2+Den Bedrooms
(Can be used as Bedroom)
2 Washrooms, 1 Kitchen

**$208,900**

**Kennedy/Ellesmere**



Condo Townhouse
New Painted, Low Maintenance Fee
3 Bedrooms, 2 Washrooms

**$169,900**

**Eglinton/Bellamy**



Condo Apt.,Newly Painted
2 +1 Bedrooms, 2 Washrooms
Corner Unit
Easy Access to Downtown

**$154,900**

**Taunton(Steels)/Westny**



Brand New Detached 2-Story
Tribute Builders, 9'Ceiling
50' Frontage, over $40k Upgrades
3198 SFT, Hardwood Floor
4 Bedrooms, 4 washrooms

**$439,900**

**Brimley/Lawrence**
Semi-Detached
Bedrooms: 3+2
Washrooms: 2
**$239,900**



HOMELIFE
HIGHER STANDARDS

**Raja Mahendran, P.Eng.**
Broker/Owner
**Cell: 416.315.9397**
**Off : 416.321.6969**



**HOMELIFE/GTA Realty Inc. 1711McCowan Rd. Suite 206, Toronto, ON M1S-3Y3**

# திரிகோணாசனமும் கால் வலியும்

இடுப்பின் பின்புறத்திலிருந்து தொடையின் பின்புறமாக கணுக்கால் வரையிலும் (ஓர் நேர்கோடு வரைந்தது போன்று) தேள் கொட்டி கடுப்பது போல சகிக்க முடியாத வலி சில நேரங்களில் தோன்றும். இது ஒருவாதரோகம் ஆகும். 'ஸையாடிக் நெர்வ்' (sciatic nerve) என்னும் ஒரு நரம்பு மேற்சொன்னது போன்று அமைந்துள்ளது. இந்நரம்பில் ஏற்படும் சோர்வினால் தான் மேற்படி வலி ஏற்படுகிறது. இதை ஆங்கில மருத்துவத்தில் 'ஸையாடிகா' (sciatica) என்று கூறுவர். ஆயுள்வேத மருத்துவத்தில் 'கிருத்ரஸி' என்றும், சித்த மருத்துவத்தில் கொருக்குவலி நோய் என்றும் கூறுவர். சிலருக்கு படுக்கையில் திரும்பி படுக்கும் போதும், சலபாசனம் அல்லது தனூராசனம் செய்யும் போதும் கெண்டைக்கால் தசைகளில் அழுத்தி பிடித்துக்கொண்டு வலி ஏற்படும். உடன் சவாசனம் செய்தால் வலி சாந்தியாகும். சிலருக்கு ஸ்கூட்டர் வாகனத்தை இயக்கத் தொடங்கும் போது காலில் தொடர்ந்து அழுத்தி அடிக்கடி கிளப்புவதால் இவ்வலி தோன்றும். இதில் முக்கியமான தோஷம் வாதம் தான்.

இந்த வலிகள் பொதுவாக மழை, குளிர், பனிக்காலங்களில் அதிகம் காணப்படும். காரணம் இக்காலங்களே மனிதனுக்கு வாதரோகங்கள் தோன்றக்கூடிய காலமாகும். மூட்டு வலிகள் இவைகளுடன் இந்த வலியும் சில நேரங்களில் சேர்ந்து கொண்டு வேதனைப்படுத்தும். ஆகவே வருமுன் காத்தல் என்ற அடிப்படையில் திரிகோணாசனம் பரிவர்த்த திரிகோணாசனம் போன்ற நின்று செய்யும் ஆசனங்களை தவறாது பழகி வந்தால் மேற்சொன்ன கால கட்டங்களில் ஒருமுறை நோயால் அவதிப்பட்டவர் கூட அடுத்த பனிக்காலத்தில் அவ்வாறு வராமல் தடுக்கலாம்.

இந்த காரணங்களை அறியாதவர்களாகிய பெரும்பாலோர் யோகாசனங்கள் எத்தனை மாதங்கள் செய்தால் போதும்? எவ்வளவு நேரம் செய்தால் போதும்? இப்பயிற்சிகளை பழகிவிட்டு விட்டால் உடல், பெருத்து விடாதே? போன்ற



கேள்விகளை கேட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்குரிய பதில் இதுதான். நீங்கள் குளிப்பதை ஒரு வாரம் நிறுத்திப் பாருங்கள். அல்லது பல்துலக்குவதைஙன்று நாட்கள் நிறுத்திப் பாருங்கள் என்ன நேருகிறது என்று? அதை போன்று யோகாசனங்களை அட்டவணைப் படுத்தி தினம் தவறாது 20 நிமிடம் செய்து வந்தால் போதும். எந்தவாத நோயும், எந்த ரோகமும் உடம்பில் பற்றாது ஆரோக்கியமாக வாழலாம்.

முக்கோண நிலையில் உடலை அமைத்து செய்வதால் அந்தப்பெயர்.

திரிகோணாசனம் செய்வதால் ஏற்படும் பலன்கள்

1. இடுப்பின் பக்கவாட்டிலுள்ள கூடுதல் தசையை குறைக்கிறது.
2. இடுப்புவலி, முதுகுவலி பக்கப்பிளவை கண்டமாலை, கிளாண்டு வீக்கம் முதலிய நோய்களை போக்குகிறது.
3. கழுத்திலுள்ள இறுக்கத்தை போக்கி அதனால் தோன்றும் தலைவலியை போக்குகிறது.
4. கண்பார்வை தெளிவடைகிறது.
5. உடல் எடை, தொந்தி குறைகிறது.
6. தட்டையான பாதத்தை திருத்தி சாதாரணநிலைக்கு வர உதவுகிறது.
7. இடுப்பு, கழுத்து, முழங்கை, முழங்கால்கள், முதுகு போன்ற இடங்களில் சில நேரங்களில் துர்நீர் சேர்ந்து வீக்கம் காரணமாக தோன்றும் வாத நோய்களை நீக்கிவிடும்.
8. உதரவிதானத்தை பலப்படுத்தி வயிற்று இறக்கம் குடல் இறக்கம் வராதபடி தடுத்து விடும்.
9. சிறுநீரகக் கோளாறுகளை சரிசெய்கிறது.
10. இரத்தகுழாய்களில் அடைப்பு, இதயவலி, இரத்த இயக்க கோளாறுகள் ஆகியவற்றை சரி செய்கிறது.
11. நுரையீரல் பலவீனம் ஆஸ்துமா போன்ற நோய்களை குணப்படுத்த உதவுகிறது.
12. இந்த ஆசனத்துடன் நின்று செய்யும் ஆசனங்களை தவறாது செய்து வந்தால் காலம் வரை வாத நோய்கள் ஏற்படாதவாறு தடுக்கலாம்.

செய்முறை

1. விரிப்பின் மீது கால்களை 1½ அடி தூரம் விலக்கி வைத்து நிமிர்ந்து நிற்கவும்.
2. கைகளை பக்கவாட்டில் பூமிக்கு இணையாக நீட்டி நிறுத்தவும்.
3. வலதுபுறமாக பக்கவாட்டில் வளைந்து வலது கால்முட்டியை வலது கையால் இறுக பற்றவும்.
4. கால் முட்டியை வளைக்காது தலையை திருப்பி இடது கையை உயர்த்தி 90 டிகிரிக்கு நேராக வைத்து கைகட்டை விரலை பார்க்கவும்.
5. 30 எண்ணிக்கைகள் அப்படியே சாதாரண மூச்சில் இருக்க வேண்டும்.
6. இப்போது நிமிர்ந்து நிற்கவும். கைகள் பக்கவாட்டில் நேராக இருக்க வேண்டும்.
7. மாற்று ஆசனமாக இடது புறம் வளைந்து 30 எண்ணிக்கைகள் செய்ய வேண்டும். இரண்டு முறை செய்தால் போதும்.

குறிப்புகள்

1. பழக பழக கால்முட்டிக்கு பதிலாக முட்டிக்கு கீழே புறங்காலை பிடித்து பழகலாம்.
2. கால்முட்டியை வளைக்க கூடாது.





## ஆரோக்கிய வாழ்வு

N. செல்வசோதி




# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



# SRI PARADISE Catering & Take -out

416.269.4509 / 416.509.2454



292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2 99 | $2 99 | $4 50 | $2 99 | $2 99 | $5 99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2 99 | $1 99 | $2 99 |

### Sri Paradiase Specials

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# இந்திரன் நல்லவனா கெட்டவனா?

*'ஹலோ!'*
*'வணக்கம் ஐயா! ஒரு சந்தேகம்...'*
*'சொல்லுங்கோ'*
*'இந்திரன் அகலியைக் கற்பழித்தவனல்லோ?'*
*'ஓம்'*
*'அவனை'*

*ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்*
*இந்திரன் சாலுங் கரி.*

*என்ற குறளில் நல்லவனாகக் காட்டுகின்றாரே திருவள்ளுவர். காமஇச்சையை அடக்க முடியாதவனை ஐம்புல ஆசைகளையும் அடக்கியவன் பெருமைக்கு உதாரணமாக எப்படிக் காட்டமுடியும்?*

## அறுவை - 39

*'நல்ல கேள்வி. பதில் எளிது. முதலிற் பதிலைச் சொல்லி விட்டுப் பிறகு விளக்கத்தைத் தருகிறேன். அகலிகையைக் கற்பழித்த இந்திரன் வேறு. வள்ளுவர் குறிப்பிடும் இந்திரன் வேறு. அவனும் இவனும் ஒருவனல்ல. வள்ளுவர் காட்டும் இந்திரன் தேவேந்திரன். அதனை வலியுறுத்தவே 'அகல்விசும்புளார் கோமான்' என்கிறார். அப்படி அவர் சொல்வதற்கும் காரணம் உண்டு. சாதாரண தேவர்களையும் 'இந்திரர்' என்று அழைக்கும் வழக்கம் இருந்து வந்திருக்கிறது. இந்திரர் என்ற பொதுச் சொல்லை 'இந்திரன்' என்ற தனிச் சொல்லாக்கித் தேவேந்திரனைக் குறிக்கும் வழக்கமும் உண்டு.*

*'இந்திரனைப் பற்றி 90க்கும் அதிகமான கதைகள் உள்ளன. இராமாயணம் பாரதம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கந்தபுராணம், பாகவதம், திருவிளையாடற்புராணம், சிவமகாபுராணம் முதலானவையும் பிறபுராணங்களும் இந்திரனைப் பற்றிய பல கதைகளைக் கொண்டுள்ளன. அகலிகை தொடர்பான கதை இராமாயணத்தில் வருகிறது.*

*'வள்ளுவர் காட்டும் தேவேந்திரன் நல்லவன், வல்லவன். ஐம்புலன்களையும், அடக்கித் தவஞ்செய்து இந்திரபதம் எய்தியவன். இந்தத் தவஞ்செய்த இந்திரனைத்தான் புலனடக்கத்துக்கு உதாரணம் காட்டுகின்றார். நீங்கள் கூறிய குறள் திருக்குறளில் 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தில் வருகின்றது. நீத்தார் பெருமை என்றால் 'நல்லொழுக்க நெறியில் நின்று உலகப் பற்றுக்களை ஒழித்தவர்களின் பெருமை' என்று பொருள். உலகப் பற்றுக்களுக்கு உடந்தையாக இருப்பவற்றுள் காமமும் ஒன்று. அதனால் வள்ளுவரின் இந்திரன் வேறு. அகலிகைமீது காமங்கொண்ட இந்திரன் வேறு என்பது தெளிவு. வள்ளுவரைப் போன்ற ஒரு பெருந்தகை உலகஞானி ஒன்றைச் சொன்னால் அவர் சொற்படி பொருள் கொள்ளுவதே சிறியாராகிய எமதுகடன் என்று நினைத்து இவ்விளக்கத்தைச் சொல்கின்றேன்.*

*'மற்றுமொன்று...யுகத்துக்கு யுகம் வெவ்வேறு இந்திரன்கள் இருந்திருக்கிறார்கள் என்ற கருத்தும் அறிஞர்களிடத்தில் உண்டு. விநாயகப் பெருமான் கயமுகாசுரனை அடக்கியது, முருகப்பெருமான் சூரபத்மனைக் கொன்றது, துர்க்காதேவி மகிடாசுரனை மடக்கியது, எல்லாம் வெவ்வேறு யுகங்களில் நடந்த சம்பவங்களாகவே கருதப்படுகின்றன. அந்தந்த யுகங்களில் இருந்த இந்திரன் ஒருவனல்லன். ஒருவனாக இருக்க முடியாது. அதனால் இராமாயணம் காட்டும் இந்திரன் ஒரு யுகத்தவன் என்றும் வள்ளுவர் கூறும் இந்திரன் வேறு யுகத்தவன் என்றும் கொள்ள இடம் உண்டு.... என்ன...ஐயம் தீர்ந்ததோ...?'*

*'தீர்ந்தது ஐயா. நான் இப்ப இரண்டு கிழமையாகச் சிலபேருடன் கதைச்சுப்போட்டுத் தான் உங்களுக்கு எடுத்தனான். அவர்களுக்கும் இது கொஞ்சம் குழப்பமாகவே இருக்கு. அவர்களுக்கும் உங்கள் விளக்கத்தை சொல்லப் போகிறேன்.'*

*'நல்லது'*
*'நன்றி ஐயா. வணக்கம்'*
*'வணக்கம்.*

பத்து இலட்சம் பொன்னும் கேட்டாள்
சத்தியமும் வாங்கிப் போட்டாள் -
சகோதரரே
தாசிகள் நேசம் மோசமே - தொலை
பேசிகள் நேசம் வாழ்கவே!



கவிஞர் வி. கந்தவனம்

## கேட்டானே ஒரு கேள்வி



**ஆசிரியர்:** (மாணவனிடம் ) இன்று என்ன தினம்?

**மாணவன்:** முட்டாள்கள் தினம் (April pool)

**ஆசிரியர்:** இன்று உங்களைப் போன்றவர்களின் விசேட தினம்

**மாணவன்:** சேர் உலகத்தில் அறிவாளிகளே இல்லையா? ஏன் அறிவாளிகளுக்கு என்று ஒரு தினமில்லை.

**ஆசிரியர்:** ? ? ?

*- கலகலப்பு தீசன்*

**நான் ஒரு முட்டாளுங்க!**


17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

## யோகாஸ்

### குறுக்கு எழுத்துப் போட்டி இல. 162

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | 5 | ■ | |
| | | 6 | ■ | 7 | | ■ | |
| | ■ | | ■ | ■ | 8 | ■ | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | ■ | | 12 | ■ | | ■ |
| | ■ | ■ | ■ | | ■ | | ■ |
| ■ | 13 | | | 14 | | | ■ |

**இட - வல**

1. "போரும் சமா-தானமும்" நூலின் ஆசிரியர்
5. நிற்பாட்டு (வல - இட)
6. மேடு (வல- இட)
7. ஆசிரியர்
9. முருகன்
11. இரவு
12. விழி (வல - இட)
13.மாதர் இடையணி

**மேல் - கீழ்**

1. எலிகளுக்கு பிடித்த உணவு என்கிறது "பட்டணத்தில் எலிகள்"
2. ஓவியம்
3. தானியம் ஒன்று
4. தமிழ் ஈழத்தில் ஒரு நகரம்
8. காற்று (கீழ் - மேல்)
10. இசை
11. நீதி
14. இரப்பவன் (கீழ் - மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| பே | ரி | யா | ழ் | ■ | மி | னா | சு |
| ரீ | ■ | த் | ■ | ன | ■ | ■ | ள |
| ச் | ■ | தி | ■ | ■ | து | ந் | கு |
| ச | ■ | ரை | ம | ■ | த் | ■ | ■ |
| ம் | நா | ■ | த் | ■ | று | ■ | பூ |
| ப | கு | த் | த | றி | வு | ■ | ரி |
| ழ | ■ | ■ | ள | ■ | றி | ■ | ப் |
| ம் | ■ | தீ | ம் | ■ | அ | ன் | பு |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் April 28, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**161இல் வெற்றி பெற்றோர்**
1) G. Shajini, Mississauga
2) Mrs. Vincent Lambert, Toronto

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]



# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

18 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

மேலைத் தேசத்தில்

கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru ® BRAND

எமது புதிய அறிமுகங்கள்




Imported & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
76, Howden Road, Scarborough.
Ontario, CANADA, M1R 3 E 4
Tel: (416) 750 1976
Fax: (416) 750 8779
www.niru.com

**NIRU (EUROPE) LTD.**
Unit 11, Mitcham Industrial Estate,
85, Streatham Road, Mitcham,
Surrey, CR4 2AP. U.K.
Tel: +44 208 640 8228
Fax:+44 208 640 8312

# ஆயுள் காப்புறுதியில் நட்டஈடு

## ஆயுள் காப்புறுதியில் நட்டஈடு
## *(Life Insurance Claims)*

“உயிர் இழப்பு நடந்தால் உயிரிழப்புக்குரியவரின் நட்ட ஈட்டினை பெற உரித்துடையவர், உடனடியாக உயிரிழப்பு தொடர்பான செய்தியினை காப்புறுதி நிறுவனத்தின் நட்டஈடுகோரும் பிரிவுக்கு (Death Claims Department) அறிவித்து விட்டு பின்வரும் மூன்று பத்திரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

**416.321.0999**




### 1. உயிரிழப்பு அத்தாட்சி பத்திரம் *(Death Certificate)*

இவ் நட்ட ஈட்டினை பெறுவதற்கு தேவையான மிக முக்கியமான பத்திரமாகும். பொதுவாக இது மரண சடங்குகள் நடாத்தும் நிறுவனத்தினால் (Funeral Homes) வழங்குவார்கள். கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் செய்த ஒருவர் ஏனைய நாடுகளுக்கு சென்று தங்கியிருக்கும் போது மரணம் நடந்தால் அந்த நாட்டில் அதிகாரத்தில் உள்ளவர்களிடம் இருந்து நட்டஈடு பெறுபவர் உயிரிழப்பு அத்தாட்சி பத்திரம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.

ஆனால் ஏனைய நாடுகளிலிருந்து எடுத்து சமர்ப்பிக்கப்படும் மரண அத்தாட்சி பத்திரங்கள் உட்பட சகல மரண அத்தாட்சி பத்திரங்களையும் உண்மையானதா? என்பதனை நட்டஈடு வழங்கும் காப்புறுதி கம்பனி உறுதிபடுத்துவார்கள்.

### 2. நட்டஈடு கோருபவரின் விண்ணப்பம் *(Death claims Application)*

ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தினை மேற்கொண்டவர் தமது மரணத்தின் பின்பு எவருக்கு நட்டஈடு சென்று அடையவேண்டும் என பத்திரத்தில் (Beneficiary) குறிப்பிட்டிருந்தாரோ அவர் கைச்சாத்திட்ட நட்டஈடு கோரும் விண்ணப்பபடிவம் சமர்ப்பிக்க வேண்டும். இவ் விண்ணப்ப படிவத்தில் மரணமானவரின் மருத்துவ உடலியல் வரலாறுகள் (Medical History) மற்றும் மரணம் தொடர்பான சகல தகவல்களும் நேர்மையான முறையில் வழங்கப்பட்டு, இவைகளில் மோசடிகள் எவையும் இல்லையா? என்பதும் உறுதி செய்யப்படல் வேண்டும்.

### 3. ஆயுள் காப்புறுதி பத்திரம் (Life Insurance Policy)

மரணத்தின் பின்பு இப் பத்திரம் தேவையில்லாவிடில் இதுவும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட மூன்று பத்திரங்களும் சமர்ப்பித்து புலனாய்வுகள் யாவும் திருப்திகரமாக முடிந்தால் துரிதகதியில் மரண நட்டஈட்டுக்கான காசோலை அதற்குரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

### புகைத்தல் பழக்கம் (smoking) உள்ளவர்கள் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்தில் சேரும் போது அது எந்த வகையில் மதிப்பீடு செய்யப்பட்டு விலைகளை சாதாரண விலையில் இருந்து சற்று அதிகப்படுத்துகின்றது?

எந்த ஒரு ஆயுள் காப்புறுதி கம்பனியும், ஆயுள் காப்புறுதியில் சேரும் விண்ணப்பங்கள் நிரப்பும் போது கடந்த வருடங்களில் ஒரு வருடமாக எப்போதாவது புகைத்தவரா?, மூன்று வருடமாக எப்போதாவது புகைத்தவரா?, ஐந்து வருடங்களில் எப்போதாவது புகைத்தவரா? எனக் கேள்வி கேட்டு அதனை உறுதிப்படுத்துவது வழமையாகும்.

மருத்துவ பரிசோதனையினை ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற்காக மேற்கொள்ளும் போது உமிழ்நீர் பரிசோதனையில் (Saliva Test) அல்லது சிறுநீரில் (Urine Test) நிக்கோட்டின் (Nicotine) என்னும் அம்சம் இருப்பதனை வைத்துக் கொண்டு இலகுவாக கண்டு பிடித்து விடுவார்கள்.

வயது குறைந்தவர்கள் புகைப்பவர்களாக இருப்பதனை விட வயது அதிகமான நிலையில் உள்ளவர்கள் புகைப்பவர்களாக இருந்தால் மேலதிகமாக செலுத்தும் அதிக பணமும் வயது அதிகரிக்க அதிகரிக்க அதிகரித்துக் கொண்டே போகும்.

ஆனால் இவ்வாறு புகைப்பவர் என்ற நிலைமையில் இருந்து தொடர்ச்சியாக ஒரு வருடம் புகைப்பதனை நிறுத்திக் கொண்டு அது பற்றி கம்பனிக்கு நிரூபிக்கும் போது காப்புறுதியின் மாதக் கட்டுப்பணத்தினை காப்புறுதிக் கம்பனிகள் குறைத்துக் கொள்வார்கள். இந்த விலை குறைப்புக்காக வேனும் தங்கள் புகைக்கும் பழக்கத்தினை ஒரு வருடம் மேலாக நிறுத்தியவர்கள் ஏராளம் பேர் உள்ளனர்.

இவ்வாறு நிறுத்தியது பற்றி காப்புறுதி கம்பனிக்கு அறிவிக்கும் போது சிறு மருத்துவ......? ஆனால் ஒரு சில கம்பனிகள் ஒரு நம்பிக்கையின் அடிப்படையில் வாக்குமூலத்தினை அடிப் படையாக வைத்துக் கொண்டு மருத்துவ பரிசோதனைகளும் இல்லாமல் குறைத்துக் கொள்ளும்.

இதே நிலைமை போதைவஸ்துகள் உபயோகித்தாலும் உண்டு. சில கம்பனிகள் புகையிலை சாப்பிடுவதாக இருந்தாலும் குருதியில் நிக்கோட்டின் காட்டும் ஆதலால் விலை சற்று அதிகமாகவே இருக்கும். இதே நேரம் ஒரு சில கம்பனிகள் புகையிலை சாப்பிடுபவர்களை கருத்தில் கொள்ளாது நிலைமையும் உண்டு.




SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL








**Fork Lift licence $75.00**

**Truck licence $899.00**

**In Classes**

**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- **A-Z & D-Z up grade • One on One Training**
- **Job Placement Right Away!**
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake $175.00**

**Excellent Quality - Low Cost Training**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)



NTE AUTO
**New Trade Engineering Inc.**




ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# மதிசூடிய பெருமானின் மணநாளாக மாண்புறும் பங்குனி உத்தரம்

பங்குனி மாதத்தின் சிறப்புமிக்க விழா பங்குனி உத்தரமாகும். மக்கள் துன்பம் நீக்கி இன்பம் பெருக்குவதே விழாவாகும். எனவேதான் இந்த பங்குனி உத்தரவிழா பலிவிழா எனவும் ஒலிவிழா எனவும் போற்றப்படுகின்றது. இறைவனின் மணநாளாக இருப்பதால் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"பலிவிழா பாடல் செய் பங்குனி உத்தரநாள் ஒலிவிழா" என்பது சம்பந்தர் வாக்கு.

பலி என்ற சொல், பயன் விளைத்தல், செழித்தல், மிகுதல், கொடுத்தல் என பல பொருள்படும். சோறு, திருநீறு என்ற பொருளும் உள்ளது. ஒலி என்ற சொல் தழைத்தல், ஆரவாரித்தல் எனப்பொருள்படும். எனவே பலிவிழா என்ற வகையில் பசியும், பிணியும், பகையும் நீங்கி வசியும் வளனும் பெருக வருவது இவ் விழாவாகும். ஒலிவிழா என்றவகையில் மக்கள் உள்ளம் தழைத்து இன்பத்தில் மூழ்கி வையகம் முந்துயர்தீரவே என்று ஆரவாரித்துக் கொண்டாடப்படுவது இவ்விழாவாகும்.

மங்கையை மணந்து நும் மயக்கம் தீர்க்க என்று இமயமலை அரசனான இமவான் வேண்டுதலின்படி இறைவன் இமயமலைக்குச் சென்று பார்வதியை மணம் செய்து கொள்கின்றார். இதன் மூலம் உலகில் இருமை நீங்கி ஒருமையுற்றது. துன்பம் அகன்று இன்பம் செழித்தது. இதனைக் கண்டவர் "மூலமாம் வினைகட்டு இன்றே முடிவு ஒருங்கு உற்றது" என்று களிப்புற்றனர். சர்வேஸ்வரன் சக்தியோடு சங்கமமாகி சகலருக்கும் இன்பத்தை அளித்த நாள் இதுவாகும்.



*அன்பினர்க் கெளிவந்துள்ள ஆதியம் பரமன் மாது*
*தன்புடையாக சீயத் தவிசின் வீற்றிருந்தலோடும்*
*துன்பகன்று இருபாலாகித் துன்றிய உயிர்களெல்லாம்*
*இன்பொடு போகமாற்றி இனிதமர்வுற்ற தன்றே*
*என்பது கந்த புராணம்.*

பங்குனி உத்தரப்பெருவிழா ஆண்டுதோறும் காஞ்சியிலும் கபாலிசரத்திலும் நடைபெறுகின்றது. ஆண்டுதோறும் ஆண்டவனுக்கு மணமா? என்று கேட்போர் இதன் உட்பொருளை உணர்ந்தால் உவகை கொள்வர். ஒன்றிய இன்ப வாழ்விற்கு வழி கோலுவதே இவ்விழாவின் நோக்கமாகும். மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் மக்கள் திருமணவாழ்வில் இணைபிரியாமல் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ வேண்டும் என்பதை உணர்ந்துவதேயாகும்.

தமிழர்கள் தெய்வ நம்பிக்கையில் ஊறியவர்கள். தம் செயல்கள் எல்லாவற்றையும் கடவுளர் மேல் ஏற்றிக் கண்டு களிக்கும் நல் உள்ளம் பெற்றவர்கள் கடவுளும் நம் போல வாழ்கின்றான் என்று இலக்கியம் இயற்றிய நிலையிலே அவனை வழிபடுபவர்கள். எல்லாவற்றிலும் கலந்தும் எல்லாவற்றையும் கடந்திருக்கும் கடவுளை நம் அருகிலே இருத்திக்காண அவர்கள் கையாண்ட வழியே இவ்விழாவாகும். எனவே தான் இளவேனில் காலத்தில் பெறும் இன்பத்தினை இறைவனை ஏற்றி கொண்டாடி மகிழ்ந்தனர்.

காதல் வாழ்வு சிறக்க ஆணும் பெண்ணும் இணைந்து இனிதே வாழவேண்டும் என்பதற்கமைய சிவனையும் சக்தியையும்

**நா.க. சிவராமலிங்கம்**

சேர்த்து கண்டு மகிழ்ந்த நாளே பங்குனி உத்தரநாளாகும். இராமபிரானும் சீதா பிராட்டியும் திருமணம் செய்ததும் அருச்சுனன் பிறந்ததும் இப்பங்குனி உத்தரநாளேயாம்.




YARL WINDOW

BLINDS & DRAPERY



BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

**கவலைப்படாதீர்கள்!**

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது
Mortgage பெற அழையுங்கள்

**ராஜ்**

416-835-6695

Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution
Lendingtree.ca



உங்கள் வருமானவரி தேவைகளுக்கு

Soft Net Solution Tax

EFILE

Personal
Small Business
Rental Statement

Ahilan Radnem
416 - 332 - 1802
Call after 6.00 pm

&

உங்கள் தையல் தேவைகளுக்கு



City Girl Sewing
Saree Blouse
Churidhar
Curtains
Alteration

Sujatha Ahilan
416 - 332 - 1802
Call after 6.00 pm

1113 – 99 Blackwell Ave., Toronto. M1B 3R5

# ஊக்கமது கைவிடேல்



பாடசாலையின் குறுகிய மார்ச் பிறேக் (March Break) ஒருவாறு முடிந்து விட்டது. பிரிந்த குடும்பங்கள் கூடியும் கூடிய குடும்பங்கள பிரிந்தும் அமளி துமளிகள் ஓய்ந்துவிட்டது.
தேனீக்கள் தேனெடுக்க செல்வது போல இனி உலகர் ஓய்ந்திருக்கமாட்டார்.



**ஊக்கமது கைவிடேல், நோய்க்கு இடம் கொடேல்**
என சிறுவயதில் படித்ததை சிலர்தான் செய்கையில் காட்டுகின்றனர். சிறுதலையிடி என்றாலே 3, 4 நாட்கள் வேலைக்கு போகாமல் சுருண்டு படுத்திருப்பவர்களும் உண்டு. 7, 8 மாத கர்ப்பிணியாக இருந்து உபாதையுடன் நிதி நிலமையை சமாளிக்க வேலைக்கு போபவர்களும் உண்டு.



வழமை போல செக்கண்புளோர் செல்லம்மாவும் கலண்டரை உருட்டி உருட்டி பார்த்துக் கொண்டிருந்தா. இனி பிறக்கிற வருசம் பார்த்திப வருசம். இந்த வருசம் எப்படியோ என பெருமூச்சுவிட உலகப்பு உலகப்பு சுமாத்திராவிலை ஏத்குவேக் நில அதிர்ச்சி (Earth quack) சுனாமி திரும்பவும் வருதாம் எண்டான் பிறிம்லி மீனாவின் மகன் மதன். இற்ஸ் கமிங் எகெய்ன். (It's coming again) என்றான்.



ஏன் மனிசருக்கு கோபம் நினைச்சநேரம் வாறமாதிரி நிலம், நீர், ஆகாயம், நெருப்பு, காற்று எல்லாத்துக்கும் கோபம் வரும்தானே. அது தானே புயலும் சூறாவளியும் சுனாமியும் என்றபடி உலரைப் பார்த்தா ஆட்டிலறி அன்னம்மா.



உலகர் குளித்து விட்டு தனது வழமையான நாலு முழத்துடனும் கறுத்த நெற்றியில் வெள்ளை விபூதி மிளிர வெளியே வர, என்ன உலகண்ணை சரியா மெலிஞ்சு போனியள் என்றா செக்கண்புளோர் செல்லம்மா. எடி அவரெங்கை மெலிஞ்சது வின்ரருக்கு 10, 15 உடுப்போடை இருந்தது. அதுதான் என்று சொல்லி சிரிக்க, கடைக்கண்ணால் பார்த்து சிரித்துக் கொண்டிருந்தா ராசம்மா.

இந்த அமளிக்குள்ளும் ரூபனும், ரூபியும் வெளிநாடு செல்லும் திட்டங்களை அமளிதுமளியாக



கதைத்துக் கொண்டிருந்தனர். யு நோ ரூபன், நாங்கள் சுனாமி வந்த எல்லா பிளேசும் போய் பார்க்கவேண்டும். உலக அதியசமும் சரித்திர புராதன இடங்களும் பார்த்த காலம் போய் சுனாமி அழிவு, போரின் அழிந்த இடங்களுக்கு போய் படம் எடுப்பது இப்போ பாஷன் ஆகிவிட்டது.





ராசம்மா 4, 5 தமிழ்ப்பத்திரிகைகளை தட்டி வாசித்து களைத்துவிட்டா. எத்தனை பல்சுவை செய்திகள். படையப்பா புகழ் ரம்மியாகிருண்ணன் ஆண்குழந்தை பெற்றது முக்கிய செய்தியாக மக்கள் முக்கியத்துவம் கொடுக்கும் காலம். அறிஞர் அண்ணா, தந்தை செல்வா, காந்தி, பாரதி போன்றோரை மக்கள் அதிகம் நினைப்பதில்லை. காதல்மன்னன் ஜெமினி கணேசனின் மறைவு அவர் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்த குடும்ப புகைப்படங்கள் ஜெமினி, சாவித்திரி ஜோடிகளை மறக்க முடியுமா. பாசமலர் - அண்ணன், தங்கை பாசம். இடையில் விபரமற்ற தெளிவற்ற சூழ்ச்சிகளில் குடும்பங்கள் பிரிதல். அண்ணன் சிவாஜி தங்கை சாவித்திரி. சிறுவயதில் கைவீசம்மா, கைவீசு கடைக்குப் போகலாம் கைவீசு. இறக்கும் தறுவாயில் கைவீசிய வாய் வசனம் பேச படம் பார்த்த ரசிகர்களின் கண்களில் நீர் விழத்தான் செய்தது. நாம் வளராமல் சின்னனாகவே இருந்திருக்கலாம் என கூறும் வசனங்கள் கண்கள் ததும்புகிறது.

123
நகைச்சுவைத் தொடர்
ராசம்மா ராச்சியம்
கலகலப்பு தீசன்


## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8 x 12
Professional Photographer - கதிர்
416 - 750 - 8118
2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



## EMBASSY

- வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451
5200 Finch Ave., Finch / Middlefield


குப்பிழான் விக்கினேஸ்வர மக்கள் மன்றம் (கனடா கிளை) நினைவுபடுத்தும்

## செம்மண் இரவு 2005

**காலம் -** **ஏப்ரல் 09, 2005**
**சனிக்கிழமை, மாலை 6:00மணி**

**இடம் -** St. Lawrence The Marty Catholic Church
2210 Lawrence Ave. E, Scarborough

பயிர்வளம் கொழிக்கும் சிவப்பு நிற மண்ணை தாயக மண்ணில் தமது பிறப்பிடமாக கொண்ட கனடா வாழ் குப்பிழான் கிராமத்து மக்களின் நிறுவனமான விக்கினேஸ்வரா மக்கள் மன்றம் “செம்மண் இரவு” என்னும் பெயரில் நடத்தவுள்ள மிகப்பெரும் கலை நிகழ்வு நடைபெறவுள்ளது.

- நாடகம்
- நாட்டியம்
- இன்னிசை கச்சேரி
- நூல் அறிமுகம்
- கவியரங்கம்

உட்பட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் அன்றைய இரவு, இதே கிராமத்து கலைஞர்களினால் நடத்தப்படவுள்ளது. மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் ***416-335-8055 416-321-0999 416-490-8982***

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா வழங்கும்

## மகுடம் 2005

**காலம் -** **ஏப்ரல் 02, 2005**
**சனிக்கிழமை, மாலை 5:00மணி**

**இடம் -** Cedarbrae C.I.,
550 Markham Road
Markham & Lawrence

- பரதநாட்டியம்
- திரையிசை நடனம்
- நாடகம்
- அக்னியின் இசை மழை

## அஞ்சல் தலை வெளியீடு
## அமரர் C.k. கந்தசாமி

கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கனடா தன் வருடாந்தக் கலை விழாவான மகுடம் 2005 இல் இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் C.K. கந்தசாமி அவர்களுக்கு அஞ்சல் தலை வெளியிட ஏற்பாடாகியுள்ளது.

கல்லூரி பழைய மாணவர் ஆசிரியர் ஆர்வலர்கள், அபிமானிகள், அவர்களின் வாரிசுகள் அனைவரையும் பங்குபற்றுமாறு சங்கம் அன்புடன் அழைக்கிறது. மேலதிக விபரங்களுக்கு

416.261.5842 416.431.1060
416.621.6308 416.431.9929

# "நமக்கு நண்பனும் நாமே பகைவனும் நாமே"

*" ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்று ஒரு பூசை முற்றபு நக்குபு புக்கென.... .." கம்பன் பூசை-பூனை, முற்றபு-முழுதாக.*

*பாற்கடலில் உள்ள பாலை முழுதாகக் குடித்துவிடவேண்டும் என ஒரு பூனை எண்ணி அப்பாற்கடலில் உள்ள பாலைப்பருக ஆரம்பித்தது போல வேதவியாசரினால் எழுதப்பட்ட "பகவத்கீதையை" நானும் பருக ஆரம்பித்தேன். மனிதன், உலகம், கடவுள் ஆகியவை பற்றித் தத்துவ பூர்வமான அடிப்படைக் கொள்கைகளை உபநிடதங்கள் விளக்குகின்றன என்றால் அவ்வேதாந்த கருத்துக்களை ஒவ்வொருவரும் வாழ்ந்து காட்டுவது எப்படி என்பதற்குக் கையேடாக அமைந்துள்ள நூல் கீதை. தெய்வீகக் கீதத்தின் மூலம் வேத உண்மைகளை கீதா ரூபமாகப் பகருவதால் கீதை என்ற பெயர்கராணத்தை உடையது.*

*ஆக்கம் - கந்தையா சண்முகம்*
*இளைப்பாறிய அதிபர் - 416-412-3570*

*மகாபாரத்தின் அங்கமாகவும், ஆன்மீக நூல்களுள் மிகச்சக்திவாய்ந்த நூல்களில் ஒன்றாகவும், இந்துமதத்திற் தோன்றிய புரட்சியை, மறுமலர்ச்சியை விளக்கும் ஒரு மகாவாக்கியமாகவும் கீதை திகழ்கின்றது. அர்ச்சுனனுடைய நிலையை நினைவில் வைத்து, குழப்பத்தினால் சக்தியற்ற, நோய் உள்ளம் கொண்ட அர்ச்சுனனுக்கு மத உண்மைகளை கிருஷ்ணர் விளக்குகின்றார். போர்க்காலச் சூழலில், ஒருவர் தனது சகோதரரைக் கொன்று குவிக்கும் படுபாதகமான கொடுமைகளில் கூட உண்மைகளை நிலை நாட்டியவர் வியாசர். தத்துவத்தின் செயல்முறையே மதம். காலத்திற்கு ஏற்றவாறு அறிவுபூர்வமான புதிய விளக்கங்களை ஞானிகளும், தீர்க்கதரிசிகளும், அறிஞர்களும் எமக்கு கற்றுக்கொடுக்கிறார்கள். ஆசைகள் எம்மைவிட்டு அகல, மாசுகள் நீங்க மனம் தூய்மையுறும். கீதையின் உட்பொருள் தர்மம்! தர்மம் ஒன்றே கீதையின் இலட்சியம்! அதனை அடைய இரண்டு வழிகள் உள. அவற்றுள் ஒன்று 'நானே செயல் புரிகிறேன்' என்றதன் உணர்ச்சியைக் கைவிட்டு வேலைகளைச் செய்தல். மற்றையது 'செயலின் பலனை அனுபவிக்க வேண்டும்' என்ற அசட்டு ஆவலை மனதிலிருந்து முற்றாக களைந்து விட்டு வேலைகளைச் செய்தல். மனதை ஒருமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் பகவத்கீதை உணர்த்துகின்றது. 'மனதை ஒருமுகப்படுத்து' என்றால் அது ஒரு சுலபமானகாரியமா? உங்கள் மனதை ஒரு குறியில் வைக்கப்பழகுதல் என்று சொல்வது சரி. அதை எப்படிச் செய்வது என்று விளங்கினால் அன்றி அது வெறுமே ஒரு தத்துவப் பிரசங்கமாகவே இருக்கும்.*

*மனிதமனம் ஒரு போதும் ஓரிடத்தில் நிற்பதில்லை. நாம் படைக்கப் பட்ட பொருட்களின் மீது கவனத்தை செலுத்துவதற்குப் பதிலாக, படைத்தவன் மீதே எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். எங்கள் வீட்டிற்கு அருகில் ஒரு சிறந்த வைத்தியர் இருப்பதாக அறிந்து எனது சிறுகாயம் ஒன்றிற்காக அவரிடம் சென்றேன். தன்னிடம் இதற்கு மருந்து உண்டு. ஒருமுறை பூசியவுடன் புண் ஆறிவிடும் என்று அவர் கூறிய போது மிகுந்த ஆவலாக இருந்தது. ஆனால் 'ஆகாய பூக்கள்' கொண்டுவந்து அரைத்துப் போடுங்கள் என்றபோது தான் எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. எனக்கு இவர் சொல்லும் ஆகாயப் பூ கிடைக்கப் போவதும் இல்லை, இவர் மூலம் எனது புண் ஆறப் போவதும் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரிந்தது.*

*இந்நேரம் இங்குள்ள ஆலயப் பிரசங்கங்கள் பலவும் எமக்கு ஞாபகம் வரும். ஒருவர் புலன்களை அடக்கி, இச்சைகளை அழித்து விடு என்று வெகு சுலபமாகச்சொல்லலாம். அதே வாக்கில் தவறாமல் பாற்குடஅபிஷேகம் எங்கள் கோவிலில் செய்தால் குழந்தைகள் இல்லாதோர்க்கு குழந்தைப் பாக்கியமும், கலியாணம் ஆகாதோருக்கு விரைவில் திருமணமும் இனிதே நிகழும் என எளிதில் பிரசாரம் செய்யலாம். ஆனால் இவை நிறைவு பெற இதனைச் சொல்பவர்க்கு முதலில் ஆன்ம ஞானம் வேண்டும். ஆன்ம ஞானம் என்றவுடன் திருநீறு பூசுதல், உருத்திராட்சம் அணிதல், தேங்காய் உடைத்தல், நினைத்தகாரியம் சொல்லல், பிரசாதம் கொண்டு போதல் என்பவற்றுடன் குழப்பிட வேண்டாம். இவை*



*ஒன்றுமே இல்லாமலே, ஒருவன் ஆன்மீக வாதியாக இருக்க முடியும். ஆசைகையவிடு. அப்போது பக்திவரும். ஞானம்வரும். சொல்வது யார்க்கும் எளிது. ஒருவன் நல்லவனாகக் கூட இருக்கலாம். அவன் கங்கைக்கரையில் இருந்தால் மட்டும் பயன் என்ன? அவனது மனம் பக்குவம் அடையாத வரை அவனுக்கும் கங்கையில் கிடக்கும் கல்லுக்கும் வித்தியாசமே கிடையாது. தூய்மை பெற்ற உள்ளத்தில் பரம் பொருள் பிரதிபலிப்பர். உண்மையான இறை இயல்புவரும். இறை உணர்வு வர பேரானந்தம் கிடைக்கும்.*

*ஒரு கதை*

*கூடை கூடையாக வைத்திருக்கும் மீன்களுக்கு நடுவிலே தூங்கிப் படுத்து எழும்பும் பழக்கம் கொண்ட ஒரு மீனவப் பெண் மணி ஒரு நாள் பூக்கடை ஒன்றில் தங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. நறுமணம் மிக்க மலர்க்குவியல்களுக்கு இடையில் அன்றிரவு படுத்துக்கொண்டாள். அவளுக்கு தூக்கமே வரவில்லை. அவள் கொண்டுவந்த மீன் கூடையை அருகில் கொண்டுவந்து வைத்தபிறகுதான் அவள் தூங்கினாள். இக்கதையைக் கேட்டால் பலருக்கும் ஒருதிகைப்பும் குழப்பமும் மனதில் வரும். மனதில் மகாபாரதப்போர்கூட நடக்கலாம். வெறும்வாய் வேதாந்தம் பேசும் இந்தக் காலத்தில் ஆலோசனைகளை வழங்கக் கூடியது இந்த பகவத்கீதை. கீதைக்கு விரிவுரை செய்தவர் ஆதிசங்கரர். சங்கரர் சிவபெருமானின் அவதாரம். வேதாந்தத்தின் ஆதிகுருவான வியாசமகரிஷியை நெஞ்சில் வைத்து வணங்கியவர் ஆதிசங்கரர். வேதம் பொதுநூல். ஆகமம் சிறப்புநூல். வைதீகத்தை சொல்வது வேதம். சைவத்தை சொல்வது ஆகமம். ஒன்றாயிருந்த வைதீகமும், சைவமும், மகாபாரத காலத்திற்குப் பின்பே இருசமயங்களாயின. வைதீம் அறிவுநெறி. சைவம் அருள்நெறி. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே என்று கருதும் ஐக்கிய நிலை அத்வைதம். இதற்கு ஒரு கதை உண்டு. அத்வைதத்தை விளக்கி உரை செய்வாய் என்ற வியாசர் கட்டளையை சிரமேற்கொண்டு அரங்கநாதன் 'அரியும் அரனும் ஒன்று' என்று பிரசாரம் செய்ய ஆதிசேடன் மேல் அமர்ந்து கங்கையில் பிரயாணமானார். ஆதிசேடன் தன்மீது அதிகபாரம் சுமத்தப்பட்டு இருப்பது போல உணர்ந்தான். மெல்ல மெல்ல பாற்கட லில் அமிழவும் தொடங்கினான். ஆதிசேடன் அச்சமுற்று இவ்வாறு பாரமாய் இருக்கக் காரணம் யாது என்று கேட்டான். உடனே அனந்தசயனன் இந்நாள்வரை நடராச மூர்த்தியை என் இதயத்தில் வைத்தன்றோ சுமந்தேன். உனக்குப்பாரம் தெரியாமல்*

18ம் பக்கத் தொடர்ச்சி


## WAREHOUSE SALE



**நம்பிக்கை, தரம்,**
**குறைந்த விலையில்**
**நிறைந்த பொருட்கள்**
**விசேட மலிவு**
**விற்பனையில் உண்டு.**



- நம்பமுடியாத, வேறு எங்கும் பெறமுடியாத விலையில் Blankets.
- விதம்விதமான Shirts, T Shirts வகைகள்
- பெரியவர்களுக்கான Gloves, Shoes
- சமையலுக்குத் தேவையான பொருட்கள்
- Traveling Suitcase

இன்னும் பல பொருட்கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: Raja / Shawn

**(416) 412.6180**



**40 Nugget Ave.**
**Unit #8**
**Mccowan & Nugget**

## ONTARIO REHABILITATION & RECOVERY CENTRE

- வாகன விபத்து
- விளையாட்டு முறிவு, தறிவு
- தசை நார் ஈய்வு
- நாரி நோவு, பிடிப்பு
- வேலைத்தள பாதிப்பு
- முள்ளந்தண்டு விலகல்
- கழுத்து பிடிப்பு
- பழைய நோவு

போன்றவற்றிலிருந்து மீள்வதற்கான பராமரிப்பு, உடற்பயிற்சிகள், தகுந்த ஆலோசனைகளிற்கான மையம்.

அக்குபஞ்சர் மற்றும் லேசர் மருத்துவம் போஷாக்கு பற்றிய அறிவுரை பராமரிப்பு.

**Specialists In:**

Chiropractic, Massage Therapy, Acupuncture, Laser Therapy, Physiotherapy and Exercise / Sports Injuries

Tel.: 416.291.0299

Fax:416.291.0994

240 Alton Tower Circle, Unit 200

Scarborough, ON M1V 4P2





# மகிழ்ச்சி தரும் நாள்

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்



உனக்கும், உனது குறிக்கோளிற்கும் குறுக்கேயுள்ள இறைவன் முழுமை நிரம்பியிருக்கும் அந்த இடைவெளியில் ஒரு வாய்ப்பு உனக்காகக் காத்திருக்கிறது. நீ அந்த வாய்ப்பை எப்படிப் பயன்படுத்தப் போகிறாய் என்பது தான் கேள்வி. பெரும் சவாலாயுள்ள அந்த இடைவெளிக்குள் நீ ஏன் உட்புகமுடியாது, கால்வைக்கக்கூடாது என நீ திரும்பத் திரும்ப உனக்குச் சொல்லிக் கொண்டிருந்த மாதிரி, மீண்டும் அதையே வலியுறுத்தி ஒன்றுமே செய்யாதிருக்கலாம். அந்த இடைவெளி பயங்கரமானது, பிரம்மாண்டமாயிருக்கிறது. அதை என்னால் சமாளிக்க முடியாது என நீ பயப்படலாம். அல்லது இது இறைவன் எனக்குத் தந்துள்ள நல்லதோர் சந்தர்ப்பம். இந்த இடைவெளியைப் பார்க்கும் என் மனப்போக்கை நான் மாற்றினால் ஈஸ்வரனுக்கும் எனக்குமுள்ள தூரத்தை கடந்து அன்பால் அவனை அடையலாம். உனக்கும் உன் குறிக்கோளிற்கும் இடையிலுள்ள ஒன்றேயொன்று, இறைவனுடன் நீ இன்னும் கூடிய நேரம் செலவழிக்கும் சந்தர்ப்பம் தான் என்பதை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். ஆகவே உனக்கும் உன் குறிக்கோளிற்கும் குறுக்கேயுள்ள இடை வெளியை உன் பூரண சரணாகதியால் நிரப்பிக் கொள். உன்னை மாற்றுவது தான் உன் முன்னேற்றம் என்பதை மறக்காதே. இறைவனுடன் கூடிய நேரம் செலவழிக்கக்கூடிய சகல சந்தர்பங்களையும் நான் பூரணமாக உபயோகிப்பேன் என விசுவாசத்துடன் இன்று நான் உறுதி கொள்கிறேன்.

எனது நாளாந்தப் பொழுதை என்ன விதமாகக் கழிக்கப் போகிறேன் என்பதை திறந்த மனதுடனும், இதயம் நிறைந்த விழிப்புணர்வுடனும் இன்று நான் தீர்மானிக்க வேண்டும்.

விசுவாசமிக்கவராக, சந்தோஷமுள்ளவராக, அமைதியானவராக, இவையெல்லாம் நிறைந்தவராக நான் இருப்பேன் என நீ தீர்மானித்தவுடன் உனது நாள் நல்ல நாளாக மாறும். மற்றவர்களால் மிதிக்கப்படாமல், அவமதிக்கப்படாமல், குழம்பித் தடுமாறாமல், கோபமடையாமல், பிரச்சினைப்படாமல் இருக்கப்போகிறேன் என நீ தீர்மானித்தவுடன் உனது நாள் நல்லதாக மாறும். எனது சொந்தக் கால்களில் நின்று கொண்டே, எனது சிந்தனை, சொல், செயலை மையப்படுத்தி ஒரு குறிக்கோளை அடைந்து என் கனவை வெற்றியுடன் நிறைவேற்றுவேன் என நீ தீர்மானித்தவுடன் உனது நல்ல காலம் ஆரம்பிக்கும். நீ, உன்னை உள்ளபடியே ஏற்று, உன்னை நீயே கொண்டாடி, உன்னை நீயே திருத்தி, உனக்கு நீயே அதிகாரமளித்து உனக்கு நீயே உத்தரவாதமளித்து, உண்மையாக நீ யாரோ அப்படியே முகமூடி அணியாமல் இருக்கிறாய் என்றால் உனக்கு நல்லகாலம் பிறந்து விட்டது. இனி உனது நாட்கள் யாவும் நல்ல நாட்களாய் மாறும். வாழ்க்கைப் பயணத்தில் பம்பரமாய்ச் சுழன்று கொண்டிருக்கும். நீ, ஒரு கணம் நிதானித்து, ஒரே, ஒரு கணம் அமைதியாயிருந்து, உனது மனதைத் தெளிவாக்கி, உனது இதயத்தை திறந்து, உனக்குள்ளிருந்து உனக்கு வழிகாட்டும் அந்தப் புனிதக்குரல் சொல்வதைக் கேட்கிறாயா? உன்னைப் பாதுகாத்து, உன்னை நேசித்து, உன்னை நன்கறிந்த அந்தக் குரல் சொற்படி நீ நடந்தால் இனி உனக்கு நிச்சயம் நல்லகாலம் தான். ஆனால் சில சமயங்களில் நீ நினைத்த மாதிரி ஒன்றுமே நடக்காமல், உனக்குக் காலம் கூடாததாக இருந்தால் கீழ்வருவதைக் கவனித்துப்பார். சிலவேளை நீ சரியான தீர்மானங்கள் எடுக்காமல் நீ விரும்பும் வண்ணம் உன் வாழ்க்கை முன்னேற கட்டாயம் செய்யப்பட வேண்டியவற்றை நேரமெடுத்துச் செய்யாமல் இருக்கிறாயா என்பதைக் கவனித்துப் பார்த்துச் சீர் செய்து கொள்.

உனது தீர்மானங்கள்தான் உன் ஆன்மாவிற்கும் முன்னேற்றத்திற்கும் தூண்டுகோலாக அமைகின்றன என்பதை இன்றுவரை நீ உணராது இருந்திருக்கலாம். உனது வாழ்வின் பாதையை, உனது நாளின் தரத்தைத் தீர்மானிக்கும் சக்தி உன் கரங்களில் தான் இருக்கின்றது என்பதை நீ புரியாது இருந்திருக்கலாம். ஒவ்வொரு நாட்பொழுதையும் நீ எவ்வாறு செலவழிக்க விரும்புகிறாய் என்று இன்று மட்டும் நீ தீர்மானித்துக் கொள். நீ தீர்மானித்த குறிக்கோளையடைய, நீ என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைப் பொறுப்புடன் உணர்ந்து தவறாது செயற்பட ஆரம்பி. உனது ஊக்கமிகு செயற்பாட்டில் தான், என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்வதால் தான் உனக்கு வெற்றி, மகிழ்ச்சி, அமைதி கிட்டும் என்பதை மறந்து விடாதே.

நான் தேர்ந்தெடுக்கும் அநுபவங்களைத் தப்பாது அடைந்து மகிழ நான் என்ன என்ன செய்யவேண்டும் எனும் தீர்மானங்களை விசுவாசத்துடன் நான் இன்று தெரிவு செய்து செயற்பட ஆரம்பிக்கிறேன்.


மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

**லலிதா புரூடி**





# ACTION HONDA

"WHERE CAR OWNERSHIP IS MADE EASY"



புதிய பழைய HONDA வாகனங்களை ஈழத்தமிழ் மகன்

**சோதீஸ்**

இடம் பெறும்போது

- சிறந்த சேவை
- Life time Oil change
- மற்றைய எல்லா இடங்களையும் விட கிடைக்காத குறைந்த விலைக்கு உத்தரவாதம்.



## Spring Special

# 416-704-1179

**அலுவலக நேரம்**
Mon., Fri., Sat.: 9:00 am - 6:00 pm
Tues., Wed.: 12 noon - 9:00 pm
4334 Kingston Rd, Scarborough






# MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# காலத்தால் அழியாத காதல் மன்னன்

*தனது 85வயதில் மறைந்த நடிகர் ஜெமினி கணேசனின் உடலுக்குத் திரையுலகினர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர்.*



*177 க்கு மேற்பட்ட படங்களில் நடித்து 'பத்மஸ்ரீ' விருதும் பெற்றவர் தமிழ்திரையுலகில் ஜெமினி கணேசனுக்கு வழங்கப்பட்ட பட்டம் காதல் மன்னன். எண்ணற்ற காதல் படங்களில் நடித்துப்புகழ் பெற்றதால் இப்பட்டம் வழங்கப்பட்டது.*

*17.11.1920 ஆம் ஆண்டு ராமசாமி கங்கம்மா தம்பதியினருக்குப் பிறந்த கணேசன் தான் இன்று தமிழகமே அறியும் ஜெமினி கணேசன். தாம்பரத்திலுள்ள கிறிஸ்தவக்கல்லூரியில் பி.எஸ்.சி வேதியல் முடித்துப்பட்டம் பெற்றார். 1947 இல் ஜெமினி ஸ்ரூடியோவில் தயாரிப்பு நிர்வாகியாகச் சேர்ந்தார். ஜெமினி ஸ்ரூடியோவில் வேலை செய்த காரணத்தால் சாதாரண கணேசன் ஜெமினி கணேசனானார். ஆரம்ப காலத்தில் மேடை நாடகங்களில் நடித்த அவர் 'மிஸ் மாலினி', மூன்று பிள்ளைகள், நவஜீவனம், அவ்வையார் உள்ளிட்ட படங்களில் நடித்தார். ஆனால் அப்படங்களில் அவருக்குக் கதாநாயகன் வேடம் கிடைக்கவில்லை. பின் நாராயணன் திரைப்பட நிறுவனத்தில் சேர்ந்தார். 'தாய் உள்ளம்' படத்தில் நாயகனாக நடித்தார். 'மனம் போல் மாங்கல்யம்', பெண், 'கணவனே கண்கண்ட தெய்வம்' ஆகிய மூன்று படங்களும் 1953இல் வெளிவந்தன. மூன்று படங்களுமே மாபெரும் வெற்றியடைந்தன.*

*முக்கியமான படங்கள் - வஞ்சிக்கோட்டை வாலிபன், மிஸியம்மா, மீண்ட சொர்க்கம், பணமா-பாசமா, சித்தி, கல்யாணப்பரிசு, பெண்ணின பெருமை, பாசமலர், பந்தபாசம், சுமைதாங்கி, கற்பகம், ராமு, தேன்நிலவு, பனித்திரை, பூஜைக்கு வந்தமலர், ஹலோ மிஸ்டர் ஜமின்தார், உன்னால் முடியும் தம்பி, அவ்வை சண்முகி ஆகியவை அவர் நடித்த பிரபலமான படங்களாகும்.*

*கமலஹாசனுடன் அவர் நடித்த 'அவ்வை சண்முகி' படத்தில் முதுமையிலும் நகைச்சுவையை வெளிப்படுத்தி சிறப்பாக நடித்தவர் என்று பாராட்டுப் பெற்றவர். கே. பாலச்சந்தரின் இயக்கத்தில் காவியத்தலைவி, இருகோடுகள், வெள்ளிவிழா, பூவாதலையா, புன்னகை, நான் அவனில்லை ஆகிய படங்கள் மாபெரும் வெற்றிப்படங்கள்.*

*1971 இல் பத்மஸ்ரீ விருது பெற்றவர் கலைமாமணி எம்.ஜி.ஆர் தங்கப்பதக்கம் உள்ளிட்ட விருதுகளையும் பெற்றார். 1976இல் 'இதயமலர்' என்ற படத்தை இயக்கினார். 50 ஆண்டுகால கலைச் சேவைக்காக சிக்காக்கோ நகர மேயரிடமிருந்து கிங் ஆவ் ஸ்டார்ஸ் (King of Stars) என்ற விருதைப் பெற்றார். இவரது படங்களில் இடம்பெற்ற காலங்களில் அவள் வசந்தம், ஓஹோ எந்தன் பேபி, காதலிலே தோல்வியுற்றான், காதல் யாத்திரைக்கு பிருந்தாவனமும் உள்ளிட்ட பாடல்கள் ரசிகர்களால் மிகவும் விரும்பப்பட்டவை.*

*சிவாஜி, எஸ்.எஸ்.ஆர் உட்பட பல்வேறு நடிகர்களுடன் அவர் சேர்ந்து நடித்தார். எம்.ஜி.ஆர் உடன் 'முகராசி', கமலஹாசனுடன் 'அவ்வை சண்முகி', 'உன்னால் முடியும் தம்பி', ரஜனியுடன் 'அலாவுதீனும் அற்புதவிளக்கும்', கார்த்திக்குடன் 'மேட்டுக்குடி', அஜித்துடன் 'தொடரும்' ஆகிய படங்களிலும் கிருஷ்ணதாசி' என்ற சின்னத்திரையிலும் நடித்தார்.*

*இவருடைய பொழுது போக்கு கோல்ஃப் விளையாடுவது, நடிகர் ஒன்றுகூட்டி கிரிக்கெட் ஆடுவார். பில்லியாட்ஸ், டேபிள்டெனிஸ், ஆட்ட ங்களில் அதிக நாட்டம் உடையவர். சிறுவயதிலிருந்தே யோகாசனங்களிலும் ஈடுபட்டு வந்தார்.*

நவம்பர் 17, 1920 ஆம் ஆண்டு பிறந்த ஜெமினி கணேசன் 22/3/2005 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர் இதுவரை 177 படங்களில் நடித்துள்ளார். ஏறத்தாள 50 ஆண்டுகளிற்கு மேலாக நடித்த இவர் பேராசிரியருமாவார். இவர் முதல் முதலாக நடித்த படம் ஔவையார். 100 வது படம் சீதா.

*சண்டைக்காட்சிகளில் டூப் (Dope) போட்டு நடிக்க விரும்பாதவர். வீரபாண்டிய கட்டப் பொம்மன் படத்தில் மாடு அடக்கும் காட்சியில் டூப் போடாமல் நடித்தவர். சரஸ்வதி சபதம் படத்தில் மல்யுத்த வீரர் ரந்தாவை தன் தோள்பட்டைக்கு மேல் தூக்கி இயக்குனர் ஏ.பி நாகராஜனை ஆச்சரியப்படவைத்தவர்.*

*தனது 19-வது வயதில் பாப்ஜியை திருமணம் செய்தார். அவர்களுக்கு நாலு மகள். ரேவதி, டாக்டர் கமலா செல்வராஜ், பத்திரிகையாளர் டாக்டர் ஜெயா ஸ்ரீதர். பின் புஸ்பவல்லியை மணந்தார். அவர்களுக்கு இரண்டு மகள். ஹிந்தி திரையுலகின் முன்னணி நடிகையான ரேகா, ராதா. தன்னுடைய பல படங்களில் நடித்து வந்த நடிகை சாவித்திரியை மூன்றாவதாக ஜெமினி திருமணம் செய்துகொண்டார். அவர்களது மகன் சாமுண்டீஸ்வரி, மகன் சதீஷ்குமார்.*

*ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது மாநிலங்களவை உறுப்பினராகும் வாய்ப்பு ஜெமினிக்கு வந்தது. ஆனால் அரசியலுக்கு வரத்தமக்கு விருப்பமில்லை என மறுத்துவிட்டார். சொந்த ஊரான புதுக்கோட்டையில் உள்ள தனது பூர்வீக வீட்டை ஆதரவற்றோர் இல்லத்துக்கு இலவசமாக வழங்கியுள்ளார். தான் படித்த சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலேயே சிலகாலம் வேதியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். பின் ஜெமினி ஸ்ரூடியோவில் வேலை கிடைத்ததும் விரிவுரையாளர் பதவியை விட்டு ஜெமினி ஸ்ரூடியோவில் வேலை செய்தார்.*

# பாவங்கள் (Sins)

முப்பது வயது மிக்க கத்தோலிக்க பாதிரியாருக்கும், இருபது வயது மிக்க இளைஞிக்கும், ஒரு நாள் உறவு ஏற்படுகிறது. பாதிரியாரின் பரிந்துரையில் இளைஞி றோஸ் மேரிக்கு தாதிக் கல்லூரியில் இடம் கிடைக்கிறது. இதற்கிடையில் பாதிரியார் வில்லியம் தூர இடத்தில் உள்ள தேவாலயத்திற்கு சென்று பாவமன்னிப்பு கேட்கின்றார்.

தாதியாக வேலை செய்யத் தொடங்கிய பின்னரும் இவர்கள் உறவு தொடர்கிறது. வில்லியம், றோஸ் மேரி தனக்கு மட்டுமே உரியவள் என்பதை, அவளது உள்ளங்கையில் சூடு போட்டு உறுதி செய்து கொள்கின்றார். இவர்களது உறவு வெளியில் தெரிய வந்த பொழுது, வில்லியம், யாரையாவது றோஸ் மேரியை திருமணம் செய்யுமாறு வற்புறுத்துகின்றார். திருமணத்தின் பின் முதலிரவு அன்றும் வில்லியம், றோஸ் மேரியுடன் உறவு கொள்கின்றார். பின்னர் றோஸ் மேரி கணவரின் உதவியுடன் தப்பிக் கொள்கின்றாள். ஆனால் வில்லியம் வெறி பிடித்தவர் போல் மாறுகின்றார். றோஸ் மேரியின் தாயை கொலை செய்து விடுகின்றார். இறுதியில் வில்லியத்துக்கு தூக்கு தண்டனை வழங்கப்படுகிறது.

60 பதுகளில் வெளிவந்த "The Priest's Wife" - Carlo Ponti என்ற இத்தாலிய இயக்குனர் இயக்கியது. சோபியா லோரன், Marcello Mastroianni நடித்தது. இப்படத்தை ஒத்து இருந்தது. முழுக்க முழுக்க செக்ஸை மையமாகக் கொண்டது. பாதிரியார் வில்லியம், றோஸ் மேரியுடன் உறவு கொள்ளும் காட்சிகள், இடங்கள் என்பன இதனை உறுதி செய்கிறது. இதில் வரும் வசனங்கள் பலரது மனத்தையும் புண்படுத்திவிடும்.

உதாரணத்துக்கு 'This is God's place', says the girl. இது கடவுளின் இடம். "But we are God's children", நாங்கள் அனைவரும் கடவுளின் பிள்ளைகள். the priest answers, gives her a hug, then a deep kiss before carrying her to accomplish their lust, for another time.
"I'm ill I'm suffering!". எனக் கூறி அவளது உடைகளை களைகின்றார். சர்ச்சை களை உருவாக்குவது வியாபார தந்திரம். இங்கு மதத்தின் பெயரால் உருவாக்கப்படடடுள்ளது.

மதங்கள் இன்று நிறுவனமயப்படுத்தப்பட்டுளளன. இது அனைத்து மதத்திலும் பல தவறுகளை உருவாக்கியுள்ளது. கேரளாவில் மேரிக்குட்டி, சிஸ்ரர் அபயா கொலை வழக்குகள் இதற்கு உதாரணம். மனிதனால் உருவாக்கப்பட்ட மதங்கள் அனைத்திலும் மனிதத்தன்மை இருப்பது தவிர்க்க முடியாது. அவை விமர்சிக்கப்படும் பொழுது தர்க்க ரீதியாக விமர்சிக்கப்பட வேண்டும். ஒரு மனநோயாளியை பாதிரியாராக காட்ட முற்பட்டு வெறும் செக்ஸ் காட்சிகளால் படத்தை நிரப்பியுள்ளனர்.

இங்கு குறிப்பாக இந்திய திரை உலகு பெண்களை வண் புணர்வு கருப்பொருளாக கருதுகிறது. இவர்கள் பற்றிய கதைகள் அனைத்தும் உடல் ரீதியான வியாபார வெற்றியே. M.G.R பெண்களை காப்பாற்றி அவர்களது உடலை வியாபார பொருளாக கையாண்டார்.

## *Night சியாமளன்*

